Registered No. M-4433. Madras War Review (TAMIL) 30-6-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ௵ ஜூன் ௴ 30உ, வெள்ளிக்கிழமை இதழ் 43

அட்மிரல் லார்டு லூயி மௌண்ட்பேட்டன்,

எதிரி மறக்கவே முடியாத தோல்வி

மிகவும் முக்கியமான திம்மாபூர்-இம்பால் ரஸ்தாவை மீட்டது பற்றி உங்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். சென்ற 2 வருஷங்களாகக் கிழ் நாடுகளைத் தாக்கிக் கொண்டு வரும் ஜப்பானியர்கள் இவ்வளவு பலங் கொண்டும் மூர்க்கத்தனமாகவும் தாக்கியதே கிடையாது. இப்போது நீங்கள் அவர்களை விமானப்படை உதவியைக் கொண்டு நிறுத்தி விட்டது மட்டுமன்றி, அவர்களைத் தாக்கி வெற்றியுங் கண்டீர்கள். அவர்களுக்கு ஏற்பட்ட இந்தத் தோல்வியை ஒருபோதும் அவர்கள் மறக்க மாட்டார்கள். இந்தியாவைத் தாக்கி, சீனாவுக்கும், ஜெனரல் ஸ்டில்வெல்லுடைய அமெரிக்க, பிரிட்டிஷ் சீனப் படைகளுக்கும் சப்ளைகள் போக ஒட்டாதபடி வெட்டி விடவேண்டு மென்பது தான் அவர்கள் ஆசை.

இது நிறைவேற ஒட்டாதபடி தடுத்து விட்டது உங்கள் வெற்றி. கடுமையான மழையையும் பொருட்படுத்தாமல் விமானங்களில் பறந்து சென்றீர்கள் ; நடந்து சென்றீர்கள் ; போராடினீர்கள் ; நிர்த்துளி செய்து முன்னேறிப் போனீர்கள். அந்தக் காலத்தில் அந்நாடு இருந்த கடுமையான நிலைமையைக் கண்டவர்கள் தான் உங்களுடைய, குறிப்பாகக் காலாட் படையினருடைய வெற்றிகளைத் தக்கபடி பாராட்ட முடியும்.

ஜப்பானியர்களுக்கு இது தெரியும். ஏனென்றால், அவர்களும் அதே நிலைமையில் போராடித் தோற்றவர்கள் தான். இம்பாலுக்குத் தெற்கேயும் கிழக்கேயும் மற்ற ஜப்பானியப் படைகள் இன்னும் போராடிக் கொண்டுதா னிருக்கின்றன. அவர்களுக்கு ஓய்வு கொடுக்காதீர்கள். மற்றவர்களை விரட்டியதைப் போலவே, இவர்களையும் விரட்டி யடியுங்கள்.

அட்மிரல் லார்டு லூயி மௌண்ட்பேட்டன் சென்ற திங்கட்கிழமை தன் படைகளுக்கு விடுத்த செய்தி.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : அட்மிரல் லார்டு லூயி மௌண்டு பேட்டன்	1	கோபல்சின் மண் கிண்ணி	5
எதிரி மறக்கவே முடியாத தோல்வி	1	நினைவும், கனவும்	7
முரசொலி	2	இந்திய பாதுகாப்புச் சட்டப்படி பிறந்த கட்டளைகள்	8
ரயில் பிரயாணத் தொல்லை	2	அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யுங்கள்	9
மீண்டும் மானர்ஹீம் அரண்	2	எங்கும் எரி நெருப்பு	11
தலையங்கம்—ஷெர்பூர்க் விழுந்தது	3	யுத்த நாட் குறிப்புக்கள்	12
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4		

முரசொலி

மிட்கியானுவைக் கைப் பற்றிய பிறகு வேறு மாதிரி விமானங்களைக் கொண்டு சீனுவுக்கு சப்ளைகள் அனுப்பக் கூடு மாகையால், சப்ளைகள் அப்போது அதிகமாகவும் அனுப்பக் கூடும். லிடோ ரோடை மீட்டுத் திறந்து விட வேண்டியது அவசியம். இது மாத்திரம் போதாது. சீனுவில் கடற் கரையையும் மீட்க சீனுவின் நேச நாடுகள் முயற்சிக்க வேண்டும்.

—மிஸ்டர் ஹென்ரி வாலஸ், அமெரிக்க உப தலைவர்,
சுங்கிங்கிலிருந்து ஜூன் 23-ம் தேதி விடுத்த அறிக்கை.

ரயில் பிரயாணத் தொல்லை

(பூமியில் மானிட ஜென்மம்—என்ற மெட்டு.)

1 பாரதச் சேயரே இன்று மிப் பார்தனில்
பரந்து நடந்திடும் போரதனல்—எங்கும்
சீருடன் ஊரெங்கும் செல்லுதல் தொல்லைகள்
சேர்ந்திடுமே இதைத் தேர்ந்திடுமே.

2 இரும்பாதி லோகங்கள் எங்கு மில்லாததால்
இந்திய நாட்டினில் இருக்கும் ரயில்—தனில்
பெரும்பாதி போரினில் பீடுறவே பங்கு
பெற்று மியற்றுதே நற்றுணையே.

3 போர்முனைக்கே சென்ற பூத எஞ்சின்வண்டி
போகவும் மிஞ்சிய புகைவண்டிகள்—இங்கு
ஊர்முழுதும் தினம் ஓடிப்பறந்துமே
ஓங்கும் பல் வீரரைத் தாங்கிச் செல்லும்.

4 தேசமெங்கும் படை வீரர்களும் நம்மோர்
தினமுண்ணும் பண்ட இனமவைகள்—எல்லாம்
நாசமுருமல் நாம் வாசம் செய்யும் இடம்
நன்கு கொண்டே ரயில் எங்கும் செல்லும்.

(தொடரும்.)

K. M. B.

மீண்டும் மானர்ஹீம் அரண்

நான்கு வருஷங்களுக்கு முன்பு மழைகாலக் கடைசியில், கரீலியன் பூசந்திக்குக் குறுக்கே, பின்லாந்து வளை குடாவிற்குக் கிழக்கே, லெடோகா ஏரிவரை மானர்ஹீம் அரண் அமைந்திருந்தது. இதை 18 டிவிஷன் ருஷ்யப் படையினர் நிர்த்தூளியாக்கினர். அந்தப் படையில் ஒரு உத்தியோகஸ்தர் இருந்தார். அவர் பெயர் ஜெனரல் கொவொரோவ். இவர் அது வரை எவ்விதப் புகழும் அடைந்தவரல்ல. இதற்கு முன்னதாக இரண்டு மானர்ஹீம் அரண்களிலுமிருந்து பின் வாங்கிய பின்லாந்துக்காரர்கள் மூன்றுவது மானர்ஹீம் அரணைக் காக்க 3 வாரங்கள் அரும்பாடு பட்டார்கள். யுத்தம் முடிவடைந்தது.

அந்த மானர்ஹீம் அரணை அதே ஜெனரல் கொவொரோவ் தகர்த்தெறிந்தார். பின்லாந்துப் படைகள் கரீலியன் பூசந்தியை நோக்கிப் பின் வாங்குகின்றன. மீண்டும் விபோரோக்கில் சரண்புகுந்தன. இந்தப் போராட்டம் எப்போது முடியுமோ தெரியவில்லை.

விபோர்ஸ்க் நகரம் 1939–40-ம் ஏற்பட்ட மழை காலத்தில் அடியோடு நாசமாக்கப்பட்டது. பின்லாந்திலேயே இது தான் 3-வது பெரிய பட்டணம். மர ஏற்றுமதி இங்கு நடப்பது போல, வேறெங்கும் பின்லாந்தில் நடப்பதில்லை. இந்த மகாயுத்தம் ஆரம்பமாகு முன்னதாக, 80,000 மக்கள் இங்கே வசித்து வந்தார்கள்.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV — 1944-ம்௵ ஜூன்௴ 30௳, வெள்ளிக்கிழமை — இதழ் 43

ஷெர்பூர்க் வீழ்ந்தது

“உங்கள் மனைவி மக்கள் முகத்தில் போய் விழிக்க வேண்டு மென்னும் எண்ணமிருந்தால் உடனே சரணடையுங்கள்” என்று ஜெனரல் அய்சினேவர் ஜெர்மன் படைத் தலைவருக்குத் தெரிவித்தார். “கேடு வரும் பின்னே மதி கெட்டு வரு முன்னே” என்ற பழ மொழிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார் அந்த ஜெர்மன் படைத் தலைவர். ஜெனரல் அய்சினேவர் கூறியிருக்கும் மொழிகளில், நீங்கள் சரணடையா விட்டால், மடிவது நிச்சயம் என்ற எச்சரிக்கை ஒலிக்கிறது ; கருணை பொழிகிறது. ஜெர்மானியர்களாயினும், அவர்களும் இந்த உலகில் வாழப் பிறந்தவர்கள் தான், அவர்கள் மடிவது கூடாது என்னும் உணர்ச்சியினால் உந்தப் பெற்றல்லவா அப்படிக் கூறி யிருக்கிறார். இந்த அமுத மொழியை அசட்டை செய்தார் ஜெர்மன் படைத் தலைவர். “மூர்க்கனும் முதலையும் கொண்டதை விடா” என்னும் பழ மொழி இந்த ஜெர்மன் படைத் தலைவருக்கு மிகவும் பொருத்தமாகும். “முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையு” மல்லவா ? தன் தவறுக்கேற்ற தண்டனையை அவர் அடைந்து விட்டார். ஷெர்பூர்க் துறைமுகத்தை இழந்தார். வட பிரான்சின் வட மேற்குத் திசையில் ஷெர்பூர்க் என்றொரு தீப கற்ப மிருக்கிறது. அதன் மேல் கரையிலுள்ளது தான் ஷெர்பூர்க் துறைமுகமும். இங்கே ஜெர்மானியர்கள் பலமான அரண்களை அமைத்திருந்தார்கள். அவற்றை எல்லாம் நேசப்படைகள் தகர்த்து விட்டன. ஷெர்பூர்க் நகரத்தின் தெருக்களில் கூட, இரு தரத்தாருக்கும் கடுமையான போராட்டம் நடை பெற்றது. நேச நாடுகளைச் சேர்ந்த அமெரிக்க 9-வது படை மகா வீரத்தோடு போராடியது. ஜெர்மன் படைகளும் மட்டம் என்று சொல்லிவிட முடியாது. ஜெனரல் அய்சினேவர் கூறிய இத மொழிகளை ஜெர்மன் படைத் தலைவர் செவியேற்றுக் கொள்ள வில்லை என்று முன்னர் கூறினோம். ஜெர்மன் படையினரின் மனோ நிலையை இது பட மெடுத்துக் காட்டுகிறது. ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்கும் இயல்பு ஜெர்மன் படைகளுக்கு இல்லை யென்று ‘உள்ளங்கை நெல்லிக்கனி’ போல் தெரிகிறது. ஆகவே, ஷெர்பூர்க்கில் கடும் போராட்டம் நடை பெற்றது பற்றி யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஆனால், ஒரு விஷயம். இப்படிப்பட்ட உணர்ச்சி, ஜெர்மானியர்கள் கைப்பற்றி யிருக்கும் நாடுகளிலிருந்து திரட்டப்பட்ட படையினரிடம் காணப்படவில்லை. இவர்கள் நெடு நாட்களாகப் போராடி அயர்வடைந்திருக்கிறார்கள். இவர்களில் நூற்றுக் கணக்கானவர்கள் இப்போது நேச நாட்டினரிடம் சரணடைந்திருக்கிறார்கள். சென்ற 25-ம் தேதி ஷெர்பூர்க் நேசப் படையினர் வசமானது. பிசாசு பிடித்தவர்களை விட்டு அதை ஓட்டினால், வழியிலுள்ள ஒரு மரக்கிளையை முறித்து விட்டுப் போகும் என்று சொல்லுவார்கள். அது போலவே தான் செய்திருக்கிறார்கள் ஜெர்மானியரும். ஷெர்பூர்க் துறைமுகத்தில் வெடி வைத்துத் தகர்த்து விட்டார்கள். வேறென்ன தான் அவர்களால் அப்போது செய்ய முடியும்? துறைமுகத்தை நாசப் படுத்தி விட்டால், நேசப் படைகளும் தளவாடங்களும் அங்கே வந்து இலகுவில் இறங்க முடியாது என்பது ஜெர்மன் படைத் தலைவரின் எண்ணம் போலும். இத்தாலியில் நேப்பில்ஸ் துறைமுகத்தை நேச நாட்டுப் படைகள் கைப்பற்று முன்னதாக, அங்கேயும் ஜெர்மன் படைகள் துறைமுகத்தை வெடி வைத்துத் தகர்த்தன. ஒரு சில வாரங்களில் நேசப் படையினர் நேப்பில்ஸ் துறைமுகத்தை மீண்டும் கட்டி முடித்து விட்டனர். அது போலவே தான் ஷெர்பூர்க் துறைமுகத்தையும் விரைவில் கட்டி முடித்து விடுவார்கள் என்பது பற்றிக் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஷெர்பூர்க் துறைமுகத்தில் இயற்கை, வசதியாயிருக்கிறது. அங்கே கடல் ஆழமாய் இருக்கிறது. ஆகவே, பெரும் கப்பல்கள் அங்கே தங்கலாம்.

பிரஞ்சு மீட்சிப் போரின் இரண்டாவது கட்டத்தை நேசப் படைகள் அடைந்து விட்டன. முதற் கட்டம் எதிரி வச மிருந்த பிரஞ்சுக் கடற் கரையில் நேசப் படைகள் இறங்கி ஊன்றிக் கொண்டது. இரண்டாவது கட்டம் ஷெர்பூர்க் வீழ்ச்சி. மூன்றாவது கட்டம் என்ன வென்று விளங்க வில்லை. மேற்கே துறைமுகத்திலிருந்து கிழக்கே செண்ட் பியர் வரையில் 24 மைல் தூரத்திற்கு அதிகமாகவே மணிக் கோர்வையைப் போல் நேசப் படைகள் அமைந்திருக்கின்றன. இந்தத் துறைமுகத்தைக் காவல் செய்து கொண்டிருந்த எதிரிப் படைகள் தப்பியோடி விடாதபடி, நேச நாடுகளின் விமானப் படைகளும் கப்பற் படைகளும் இடைவிடாது தாக்கிக் கொண்டே யிருந்தன. இதனால் நிச்சயமாக ஏராளமான சேதம் ஏற்பட்டிருக்கும். நான்கு வருஷங்களுக்கு முன்பு ஜெர்மானியர் கை ஓங்கி யிருந்த காலத்தில், ஜெர்மானியர்கள் தாக்குதல்களுக்கு ஆற்றமல் பிரிட்டிஷ் படைகள் டன்கர்க்கிலிருந்து பின்வாங்கி இங்கிலாந்துக்குத் திரும்பி விட்டார்கள். ஷெர்பூர்க்கி லிருந்த ஜெர்மன் படைகள் அப்படியும் செய்ய முடிய வில்லை. இப்போது ஷெர்பூர்க் துறைமுகம் நேச நாட்டினர் வயமாகி விட்டபடியால், இனி நேசநாட்டுப் படைகளையும் தளவாடங்களையும் ஏராளமாக அங்கே கொண்டு வந்து இறக்கிக் கொள்ள முடியும். ஹிட்லருடைய படைகளும் தளவாடங்களும் பிரான்சுக்கு வந்து சேருவதற்குப் பிடிக்கக் கூடிய காலத்தை விட, விரைவாகவே நேசப் படைகளும் தளவாடங்களும் அங்கே போய்ச் சேர்ந்து

விடும். அப்போது ஜெனரல் அய்சினோவர் தன் படைகளைக் கொண்டு முழுமூச்சாக எளிதில் தாக்க முடியும். அவரது படைகளைத் தடுக்க ரோமலின் படைகளால் முடியாது போய் விடும். பிரிட்டிஷ் படைகளோடும் கனடியப் படைகளோடும் மார்ஷல் ரோமலுடைய படைகள் கெய்ன் என்னு மிடத்திற் கருகில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஷெர்பூர்க்கில் காவலிருந்த அச்சுப் படைகளுக்கு உதவியாக ரோமல், கெய்ன் நகரத்திலிருந்த படைகளை அனுப்ப ஒட்டாதபடி தடுக்க வேண்டித் தான் பிரிட்டிஷ் படைகளும் கனடியப் படைகளும் போராடிக் கொண்டு அங்கே போக்குக் காட்டிக் கொண்டிருந் தார்கள். ஷெர்பூர்க்கைக் காப்பாற்றும் பொருட்டு தன் படைகளைத் திரட்டி அங்கே அனுப்பி யிருந்தால், லாயிரை நோக்கி ஜெனரல் மான்ட்காமரி தலைமையில் நேசநாட்டுப் படைகள் முன்னேறி யிருக்கு மென்றும், அப்படி முன்னேறினால், ஜெர்மன் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் ப்ரெஸ்ட் தீபகற்பத்திற்கும் சீன் ஆற்றை யடுத்துள்ள பகுதிகளுக்கும் ஆபத்தாக முடிந்திருக்கு மென்று மார்ஷல் ரோமல் சமாதானம் கூறுகிறார்.

ஷெர்பூர்க் போராட்டத்தின் முதற் கட்டத்தைச் சமாளிக்கவே மார்ஷல் ரோமலினால் முடிய வில்லை. இரண்டாவது கட்டமும் 4 நாட்களில் முடிவடைந்தது. இதினின்று ஒரு உண்மை தெள்ளத் தெளிய விளங்குகிறது. ஜெர்மன் படை பலம் வெகுவாகக் குறைந்து விட்ட தெனத் தெரிகிறது. இந்த நிலைமையை ஜெனரல் அய்சினோவர் தக்கபடிப் பயன் படுத்திக் கொள்ளத்தான் செய்வார். இவற்றை யெல்லாம் முன்னதாகவே யூகித் துணர்ந்து தான் நமது முதன் மந்திரி சர்ச்சிலும் இந்த வேனிற் காலத்திலேயே பூரண வெற்றி கிடைக்கு மென்று கூறினார். இவருடைய மொழி பலிக்கும் என்று உறுதியாக நம்பத் தக்க அறிகுறிகள் தோன்றுகின்றன.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

விமானியில்லா ஜெர்மன் விமானம்

பிரஞ்சுக் கரையி லிருந்து இங்கிலாந்தின் தென் பகுதியை அவ்வப்போது தாக்கிக் கொண்டிருக்கும் விமானியில்லா ஜெர்மன் விமானங்கள் பற்றி நாம் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதை இயக்குவிப்பது ரேடியோவல்ல; அதை ஒரு முறை கிளப்பி விட்ட பிறகு அதை அடக்க ஜெர்மனியால் முடியாது. பல மாதங்களுக்கு முன்பே இந்தத் தாக்குதல்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். அதாவது ஜெர்மன் தொழிற்சாலைகள் மீது நேசப்படைகள் குண்டுகளை வீச ஆரம்பித்த போதே, இதை ஜெர்மானியர்கள் கையாண்டிருக்கலாம். ஆனால் அதற்கு முன்னதாகவே, முக்கியமான ஆராய்ச்சி ஸ்தலங்களான பீனிமண்டி தொழிற்சாலையை நேசப் படைகள் தாக்கி நிர்த்தூளியாக்கிவிட்டன. ஆகவே தான், விமானியில்லா விமானங்களைக் கையாள ஜெர்மானியர்களால் அப்போது இயலாமற் போய்விட்டது. போர் விமானங்களும் வெடிகுண்டு விமானங்களும் கட்டுவதைவிட இந்த விமானியில்லா விமானங்களைக் கட்டுவதில் தான், ஹிட்லர் முனைந்திருந்தார். இதனால் தான் ஜெர்மன் விமானப்படை பலங்குன்றி யிருந்தது போலும்.

"இராணுவ முறைக்கு ஒவ்வாததும், தாக்குமென்னும் உறுதிப்பாடில்லாததுமான தோர் ஆயுத"மென்று, விமான மந்திரி காரியாலயத்தார் இந்த விமானங்களைப் பற்றி கூறுகிறார்கள். பீதியையும் பாதுபாடற்ற முறையில் உயிர்ச் சேதமும் உண்டாக்க வேண்டு மென்னும் நோக்கத்தோடு தான் ஹிட்லர் இவற்றை விடுக்கிறார் என்று தெளிவாகத் தெரிகிறது.

> "சரியான கொள்ளைக்காரனுக்குள்ள லட்சணங்க ளெல்லாம் இந்தப் புதிய ஜெர்மன் இரகசிய ஆயுதத்திற்கு உண்டு"

என்று பிரிட்டிஷ் விமானப்படை உதவி மந்திரி காப்டன் ஹெரால்ட் பால்மோர் குறிப்பிட்டார். இந்த விமானத்தைக் குறித்து அளவு கடந்த ஆனந்தமும் நம்பிக்கையும் தாம் கொண்டிருப்பதாக ஜெர்மன் விமான நிலையங்கள் ஒலி பரப்புகின்றன. ஹிட்லர், கொப்பல்ஸ் முதலியோரின் மனோ பீதி எவ்வளவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு அறிகுறி என்றும் அவர் கூறுகிறார். இந்த விமானத்தை உபயோகிப்பது பற்றி "லண்டன் டெய்லி எக்ஸ்பிரஸ்" என்னும் பத்திரிகை எழுதியதாவது :—

> "புகையைக் கக்கிக் கொண்டே வானத்தைக் கிழித்துக் கொண்டு வரும் இந்த விமானம், ஜெர்மானியரின் ஒரு யுத்த ஆயுதம். இவை ஒவ்வொன்றும் ஐரோப்பாவை மீட்கும் பொருட்டுப் போராடும் படைகளோடு போர் புரிவதற்சாக பயன்படுவனவல்ல."

"லண்டன் டைம்ஸ்" பத்திரிகை, ஜூன் 17-ம் தேதி தன் தலையங்கத்தில் இது பற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது :—

> இந்தச் சில்லரைத் தாக்குதல்களின் நோக்கமே பிரிட்டிஷ் பொது மக்களின் மனோபலத்தைக் குலைக்க வேண்டு மென்பது தான்; ஆனால் பிரிட்டிஷ் பொது மக்களோ இன்றுள்ள மனோபலத்தோடு ஒருபோதும் இருந்த தில்லை."

பிரிட்டன் அமைதியுடனும் உறுதியுடனும் சமாளிக்கிறது

பிரிட்டன் மீது ஜெர்மானியர்கள் வெடிகுண்டுகளை வீசித் தாக்கிய போது எவ்வளவு மனோ பலத்துடனும் உறுதியுடனுமிருந்தார்களோ, அதே போலத் தான் இப்போதும் இருக்கிறார்கள். இது பற்றி ஜூன் மாதம் 16-ம் தேதி காமன்ஸ் சபையில் உள்நாட்டுப் பாதுகாப்பு மந்திரி மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன் கூறியதாவது :—

> "விமானி யில்லா விமானங்களை எதிரிகள் கையாளுவார்க ளென்று எதிர்பார்த்தது தான். அதைத் தடுப்பதற்கான முறைகள் ஏற்கெனவே கையாளப்பட்டு விட்டன. இன்னும் உக்கிரத்தோடு தொடர்ச்சியாகக் கையாளப் படும். இந்தப் புதிய ஆயுதத்தைக் குறித்து பிரமாதப்படுத்த வேண்டிய முக்கியம் எதுவுமில்லை.

இப்படிப்பட்ட விமானத் தாக்குதல்கள் நேருமென்று மிஸ்டர் சர்ச்சில் 4 மாதங்களுக்கு முன்பே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதுபற்றி மேலும் அவர் காமன்ஸ் சபையில் 22-2-44-ம் தேதி கூறியதாவது :—

> "ஜெர்மானியர்கள் புதிய தாக்குதல் முறைகளுக்காக பிரஞ்சுக் கரைகளில் ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அது விமானி யில்லாத விமானங்களாகவோ ஆகாயத்தில் கிளம்பிப் போய் வெடிக்கும் குண்டுகளாகவோ இருக்கலாம். இவற்றை நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டு வந்திருக்கிறோம். கவனித்துக் கொண்டும் ஆயத்தம் செய்து கொண்டும் வந்திருக்கிறோம்."

இந்த ஆயுத பலத்தைக் கொண்டு யுத்தத்தின் போக்கையே மாற்றிவிடலா மென்று அச்சு நாட்டாரும் அவர்களுடைய கூட்டாளிகளும் நம்புகிறார்கள். ஜூன் மாதம் 18-ம் தேதி "இந்தப் புதிய ஆயுதங் காரணமாக இந்த மகா யுத்தம் முடிவடையுங் காலம் நெருங்கிவிட்டது" என்று ரங்கூன் வானொலி நிலையம் கூறியது. சென்ற வாரம் ஜூன் மாதம் 20-ம் தேதி ஜெர்மன் வானொலி இராணுவ விமர்சகர் ஜெர்மன் படையினருக்குச் செய்த ஒலிபரப்புப் பிரசங்கத்தில் கூறியதாவது :—

> "ஒரு விஷயம் மிகவும் நன்றாக நமக்குத் தெரியும். பிரிட்டானியரிடம் தற்கால முறைப்படி தயாரிக்கப்பட்ட தளவாடங்களும் தேவைப் பொருட்களும் ஏராளமாய் இருக்கின்றன.

(6-பக்கம் பார்க்க)

கோபல்சின் மண் கிண்ணி

மித்திர பேதம் செய்ய ஜெர்மானியர் முயற்சி

அச்சுப் பிரசார ஆராய்ச்சி

"பழைய கந்தன் கந்தனே, பழைய மண் கிண்ணி மண் கிண்ணியே" என்று ஒரு பழமொழி உண்டு. அது டாக்டர் கோபல்சுக்கு இப்போது மிகவும் பொருத்தமா யிருக்கிறது. அவர் செய்த அட்டகாச மெல்லாம் அடியோடு போய் விட்டது; வீண் பெருமைக ளெல்லாம் வியர்த்தமாய் விட்டன; ஆடம்பரம் அனைத்தும் அடங்கி ஒடுங்கி விட்டன. டாக்டர் கோபல்ஸ் பழைய கந்தனாய் விட்டார்; பழைய மண் கிண்ணியை கையிலெடுத்துக் கொண்டார். பழைய மண் கிண்ணி என்றால் என்ன? டுனீசியா மண் கிண்ணி தான்! வட ஆப்பிரிக்கா யுத்த முடிவு காலத்துக்கு முன், டுனீசியாவின் முக்கியத்தைப் பற்றியும், அதை ஜெர்மானியர்கள் கைவிட்டுப் போவதில்லை என்றும் பிரமாதமாக கோபல்ஸ் பிரசாரம் செய்தார். முடிவில் என்னாயிற்று? டுனீசியாவை ஜெர்மானியர்கள் கைப்பிடியாகப் பிடித்து வைத்திருக்க முடியவில்லை.

கோபல்ஸ் பிரசார மாற்றம்

உடனே கோபல்ஸின் பிரசாரம் மாறி விட்டது. 'டுனீசியா அவ்வளவு முக்கியமானதல்ல; அது போனால் போகிறது' என்ற முறையில் பர்லின் நிலையமும் இதர அச்சு நிலையங்களும் பேச ஆரம்பித்தன. 'சீச்சி, இந்த டுனீசியா திராட்சைப்பழம் புளிக்கும்' என்று அப்போது கூறிய டாக்டர் கோபல்ஸ், அதே புளிப்புப் பிரசாரத்தை இப்போது ரோம் நகரத்தைப்பற்றி செய்து வருகிறார். ரோம் நகரத்தை இழந்த பிறகு, பல மணி நேரங் கழித்து, ஜெர்மன் பிரசார மந்திரி சபை ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில், "ரோம் நகர வீழ்ச்சி எங்களுக்கு ஒரு தோல்வியல்ல; ஆனால் ஐக்கிய நாடுகளுக்கு நசுங்கிப் போகக்கூடிய மிகக் கடுமையான அடிகளில் அது ஒன்று", என்று, வாய் கூசாமல் கூறியிருக்கிறது. இந்த அறிக்கை ஒலிபரப்பில் அன்றையத் தினமே, டோக்கியோவிலிருந்து வந்த ஒரு செய்தியை கோபல்ஸ் பர்லினில் இருந்து வெளியிட்டிருக்கிறார். ஜப்பானியர்கள் ரோம் நகரம் வீழ்ச்சி யடைந்ததைக் கேட்டு, "மிகவும் பரிதாப மடைந்தார்கள்" என்பது தான் அச்செய்தி!

யாரோ செத்தால் அவளேன் அழுதாள்?

ரோமாபுரியின் வீழ்ச்சி ஐக்கிய நாடுகளின் தோல்வி என்றால், அதற்காக ஜப்பான் ஏன் பரிதாபப் பட வேண்டும்? "யாரோ செத்தால் அவளேன் அழுதாள்?" என்று ஒரு பழமொழி கூறுவார்கள். அதைப் போல, ரோம் நகரத்தைப்பற்றி, டோக்கியோ ஏன் ஒப்பாரி வைக்க வேண்டும்? டோக்கியோ மாத்திரமல்ல; ரோம் நகரத்தில் பல ஆண்டுகளாக முடிசூடா மன்னராக இருந்து எதேச்சாதிகாரம் நடத்திவந்த முசோலினியும் ஒரு ஒப்பாரி அறிக்கை விடுத்திருக்கிறார். துக்கக் குறிகளுடைய ஆடையை அணிந்து ரோம் வீழ்ச்சிக்காக எல்லா இத்தாலிய மக்களும் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் வேண்டுகோள் வெளியிட்டிருக்கிறார்.

இத்தாலிய மக்களின் பெரு மகிழ்ச்சி

ஆனால் இத்தாலிய மக்கள் என்ன செய்தார்கள்? பண்டைப் பெருமையும் புகழும் கொண்ட ரோம் நகரில் நேசத் துருப்புகள் பிரவேசித்த போது, இத்தாலிய மக்கள் பெரு மகிழ்ச்சி யடைந்தார்கள்; பேரானந்தம் கொண்டார்கள்; ஆனந்தத் தாண்டவம் செய்தார்கள். ஆனால் டாக்டர் கோபல்ஸ் பழைய மண் கிண்ணித் தாண்டவம் செய்தார். இந்தக் கிண்ணித் தாண்டவத்தின் வேடிக்கைகளைச் சற்று குறிப்பிடலாம்.

17 நாட்களுக்கு முன், அதாவது ஜூன் மாதம் 4-ந் தேதி கோபல்சின் பிரதம சிஷ்யராகிய லார்டு ஹா-ஹா இத்தாலிய யுத்தத்தின் போக்கைப்பற்றி, பர்லின் நிலையத்திலிருந்து பேசினார். விநோதமான பேச்சு! வேடிக்கையான வியாக்கியானம்!! அவர் கூறுகிறார்.

"இத்தாலி யுத்தத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரிப்படுத்த வேண்டுமென்றால், ஜெர்மன் தளகர்த்தர்கள் செய்திருக்கலாம். ஏராளமாக ஜெர்மன் துருப்புகளை அனுப்பி யிருந்தால், இத்தாலி சண்டை வேறு விதமாக முடிந்திருக்கும். உண்மை விஷயங்களை அறிந்தவர்கள் யாரும் இதை மறுக்க முடியாது."

லார்டு ஹா-ஹா கூறுவதைச் சரியென்றே வைத்துக் கொள்ளலாம். ஏன் ஜெர்மானியர்கள் ஏராளமான துருப்புகளை அனுப்பி, ரோம் நகரத்தைப் பாதுகாக்கவில்லை? "அது அவ்வளவு முக்கியமானதல்ல; அதனால் தான் அதைப் பாதுகாக்காமல் விட்டு விட்டார்கள்" என்று லார்டு ஹா-ஹா கூறுகிறார். இது எப்படி இருக்கிறது என்றால், தென்னை மரத்தில் தேங்காய் திருடப் போனவன் கதையைப்போலிருக்கிறது. தோட்டக் காவற்காரன் வந்ததும், திருடன் தேங்காய் திருடுவதை விட்டு விட்டு, தலைதப்பினால் போதும், என்று அவசரம் அவசரமாகப் போகிறான். "ஏன் தென்னை மரத்தில் ஏறினாய்"? என்று காவற்காரன் திருடனைக் கேட்டான். "மாட்டுக்குப் புல் சேகரிப்பதற்காக ஏறினேன்" என்றான் திருடன். "தென்னை மரத்தில் எங்கேயாவது புல் இருக்குமா? என்று அதட்டினான் காவற்காரன்." "இல்லை என்று தெரிந்து தான் இறங்கிப் போகிறேன்" என்று சொல்லி ஒரே ஓட்டம் எடுத்தானாம் திருடன்!

சீ! இந்தப் பழம் புளிக்கும்

இதைப்போல, இத்தாலியின் தலைநகரமாகிய ரோமாபுரியை ஆக்கிரமித்த ஜெர்மானியர்கள், உலக சுதந்திரக் காவலாளர்களான நேசத் துருப்புகளின் தீவிர முன்னேற்ற வேகத்தைக் கண்டு அஞ்சினார்கள்; "ரோம் நகரம் எங்களுக்கு முக்கியமானதல்ல; ஆகையால் நாங்கள் அதை விட்டுப் போகிறோம்" என்று புறமுதுகிட்டு ஜெர்மானியர்கள் ஓடி விட்டார்கள்.

ரோம் நகரம் முக்கியமானதல்ல என்றல்லவா லார்டு ஹா-ஹா கூறுகிறார்? ஆனால் ஜெர்மானிய தளகர்த்தரான மார்ஷல் கேசல்ரிங் ரோம் நகரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்த தம்முடைய துருப்புகளுக்கு என்ன கட்டளை யிட்டார்? "ரோம் நகரத்தைக் கைவிட்டால், நாம் எல்லாவற்றையும் இழந்தவர்களாவோம். ஆகையால் அதைக் கட்டாயம் பாதுகாத்தாக வேண்டும்" என்று உத்திரவிட்டிருக்கிறார். கையிலிருக்கும் வரை முக்கியமாயிருந்த ரோம் கைவிடப்பட்ட பிறகு முக்கியத்தை இழந்து விட்டது போலும்! கோபல்சின் பாடத்தை ஜப்பானிய ஆதிக்க நிலையமாகிய சைகான் 15 நாட்களுக்கு முன் அப்படியே ஒப்பித்திருக்கிறது. ஜூன் 6-ந் தேதி இந்துஸ்தானி மொழியில் செய்யப்பட்ட ஒலிபரப்பில், "ரோம் நகரத்தைக் கைப்பற்றியதால் நேச தேசத்தார்களுக்கு யாதொரு பிரயோசனமுமில்லை" என்று சைகான் தெரிவிக்கிறது. ஆனால் இத்தாலியின் போக்கு வரவு சாதன பூகோள படத்தைப் பார்த்தால், ரோமாபுரியின் முக்கியத்துவம் புலப்படும். இதல்லாமல், ரோமுக்கு அருகாமையில் சில விமான தளங்கள் இருக்கின்றன. அவைகளி லிருந்து நேச தேச விமானங்கள் ஐரோப்பாவின் தென் பாகங்களையும், தென் கிழக்குப் பாகங்களையும் நன்றாகத் தாக்கலாம்.

பால்கனில் பரபரப்பு

மேலும், ஜெர்மானியர்கள் ரோமை இழந்ததால், அவர்களுடைய அடிமைகளாகிய பால்கன் நாடுகளில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. "ஹிட்லருடைய ஜெர்மனி அடியோடு அழிந்து போவதற்குக் காலம் நெருங்கியிருக்கிறது என்பதற்கு, ரோமாபுரியின் வீழ்ச்சி ஒரு சின்னம்" என்று ரஷ்யப் பத்திரிகையான "ப்ரிவதா" ரோமின் முக்கியத்தைச் சுருக்கமாக விளக்கி யிருக்கிறது.

ஜெர்மனியை அழிக்கும் முயற்சி

இப்போது ஹிட்லருடைய ஜெர்மனியை அழிக்கும் மாபெரும் முயற்சி 15 நாட்க

ளுக்கு முன் தொடங்கப்பட்டது. இதைப் பற்றி கோபல்சும், லார்டு ஹா-ஹாவும் செய்துவரும் விஷமப் பிரசாரத்துக்கு அளவேயில்லை. உதாரணமாக 7 நாட்களுக்கு முன், அதாவது ஜூன் 14-ந் தேதி லார்டு ஹா-ஹா மேற்கிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பெருந் தாக்குதலைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நேச தேசத் துருப்புகள் பிரான்சுக் கரை யோரங்களில் இறங்கியதை ரஷ்யா விரும்பவில்லை என்றும், நாகரிக மடைந்த ஐரோப்பா முழுவதையும் கைப்பற்றிக் கொள்வதற்காக மார்ஷல ஸ்டாலின் ஒரு சொந்தத் திட்டம் போட்டிருக்கிறா ரென்றும் ஒரு பெரிய பொய்யைப் பர்லின் வியாக்கியான கர்த்தா கூறி யிருக்கிறார். இதனுடைய நோக்கம், வழக்கம் போல, நேச தேசத்தாருக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் அபிப்பிராய பேதம் ஏற்படுத்தி மனக் கசப்பு உண்டாக்க வேண்டும் என்பது தான். ஆனால் லார்டு ஹா-ஹாவினுடைய முயற்சி பயன்படப் போவதில்லை. ரஷ்யா நேச தேசத்தார்களைப் பற்றித் தப்பாக எப்போதும் நினைத்த தில்லை; நினைக்கப் போவதுமில்லை.

ஸ்டாலின் மகிழ்ச்சிப் பெருக்கு

சென்ற புதன்கிழமை அதாவது ஜூன் 14-ந் தேதி "ப்ராவ்டா" என்ற ரஷ்யப் பத்திரிகை நிருபருக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையில் எம். ஸ்டாலின் நேச தேசத்தாரின் பெருந் தாக்குதலை வரவேற்று, பாராட்டி யிருக்கிறார். "யுத்தங்களின் சரித்திரத்திலேயே, இவ்வளவு மகத்தான ஒரு தாக்குதல், இவ்வளவு சிறப்பாக நடத்தப்படவில்லை. இது ஒரு மிகச் சிறந்த அபூர்வமான காரியம் என்று சரித்திரம் பாராட்டும்" என்று ரஷ்யாவின் மாபெருந் தலைவர் நேச தேசத்தார் முயற்சியைப் பற்றி, தன்னுடைய மகிழ்ச்சிப் பெருக்கைத் தெரிவித்திருக்கிறார். ஆகையால், ரஷ்யா இப்பெருந் தாக்குதலைப் பற்றி அதிருப்தி கொண்டிருக்கிற தென்பது எவ்வளவு அசம்பாவிதமான பொய்!

மற்றொரு முழுப் பொய்

இதே மாதிரியான மற்றொரு பொய், மார்ஷல் ஸ்டாலின் ஐரோப்பாவைக் கைப்பற்றி அதை போல் ஷிவிக் மயமாக்கப் போகிறார் என்பது. இதை ஆணித்தரமாக ரஷ்யத் தலைவர் மறுத்திருக்கிறார். "பிற மக்களை அடிமைப் படுத்தி அடக்கி ஆள்வது, பிற நாடுகளைக் கைப்பற்றுவது எங்களுடைய யுத்த லட்சியமல்ல; எந்த காலத்திலும் அது எங்களுடைய லட்சியமாகாது" என்று அவர் நவம்பர் 1941-லேயே விளக்கமாகக் கூறி யிருக்கிறார்.

பிரான்சில் நடக்கும் பெரும் போரைப் பற்றி இன்னும் இரண்டொரு வேடிக்கையான பொய்களைச் சற்று கவனிக்கலாம். நேச தேசத் துருப்புகள் செய்து வரும் பிரமாண்டமான தாக்குதலுக்கு விரோதமாக பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்களாம்; ஆயினும், ஸ்டாலின் விடாப் பிடியாக, இரண்டாவது போர் முனை வேண்டு மென்று கட்டாயப் படுத்தியதற்காகத் தான் இத் தாக்குதல் ஆரம்பிக்கப் பட்டது என்று லார்டு ஹா-ஹா 10 நாட்களுக்கு முன், அதாவது ஜூன் 11-ந் தேதி கூறி யிருக்கிறார்.

பொய் மொழிப் புலவர் லட்சணம்

எல்லாம் நேரில் கண்டது போலப் பேசுவது தான், பொய் மொழிப் புலவர்களுடைய லட்சணம்! பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் 'தாக்குதல் வேண்டாம்' என்று அபிப்பிராயப் பட்டால், ஜூன் மாதம் 6-ந் தேதி பிரெஞ்சுக் கடற் கரைகளில் நேசத் துருப்புகள் இறங்கி இருக்க முடியுமா? 'கேழ்வரகில் நெய் வடிகிற தென்றால் கேட்பாருக்கு மதியில்லையா' என்பார்கள்; அதைப் போல லார்டு ஹா-ஹா இப்படிப்பட்ட விளக்கமான பொய்யைக் கூறினால் யார் நம்புவார்கள்? ஆனால் இந்தப் பொய்யினுடைய அடிப்படையான நோக்கம் வேறு. அதாவது, தாக்குதலுக்கு முழுவதும் தயாராவதற்கு முன்னமேயே, போர் ஆரம்பமாகி விட்டது என்ற அபிப்பிராயத்தைப் பரவும் படி விட்டால், அது ஜெர்மன் மக்களுக்குச் சற்று ஆறுதல் அளிக்காதா என்ற எண்ணம் தான். ஆனால் உண்மை என்ன? மிஸ்டர் சர்ச்சில் கூறியபடி, சகல ஏற்பாடுகளும் பரிபூரணமாகச் செய்து முடித்த பின் தான், ஐரோப்பாவின் மேல் பெருந் தாக்குதல் தொடங்கப் பட்டது. இத் தாக்குதல் ஸ்டாலினுடைய தாண்டுதலுக்காக மாத்திரம் ஆரம்பிக்கப்பட்ட தல்ல. ரஷ்ய யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே, மிஸ்டர் சர்ச்சில் இதைப் பற்றி எச்சரிக்கை செய்திருக்கிறார். நான்கு வருஷங்களுக்கு முன், அதாவது 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 4-ந் தேதி, "நாங்கள் எந்தக் காலத்திலும் சரணடைய மாட்டோம்" என்று அவர் கூறி யிருக்கிறார். இதற்கு ஒரு மாதத்திற்கு பிறகு, அதாவது ஜூலை 14-ந் தேதி, "ஜெர்மானிய ரகசியப் போலீஸ்காரர்களுடைய ஆட்சியின் கீழ் ஐரோப்பிய மக்கள் அதிக காலம் இருக்கப் போவதில்லை" என்று அறிவித்தார்.

யதேச்சாதிகாரம் ஒழியும்

மூன்று மாதங்களுக்குப் பின், ஐரோப்பாவிலிருந்து ஜெர்மானிய ஆதிக்கத்தை ஒழிப்பதைப் பற்றி மீண்டும் மிஸ்டர் சர்ச்சில் பிரிட்டிஷ் மக்களின் மன வுறுதியைப் பற்றிக் குறிப்பிட்டார். "ஐரோப்பாவிலிருந்து ஜெர்மானிய எதேச்சாதிகாரத் தொத்து நோய் விரட்டப்படும் வரை, நாங்கள் சும்மா யிருக்கப் போவதில்லை; தளர்ச்சியடையப் போவதில்லை" என்று 1940-ம் ஆண்டு அக்டோபர் 4-ந் தேதி கூறினார். இதெல்லாம் ரஷ்ய யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் கூறிய பொன் மொழிகள். இவை யெல்லாம் ஹிட்லருடைய ஐரோப்பியக் கோட்டையைத் தாக்கித் தகர்க்க வேண்டும் என்ற உறுதியால் ஏற்பட்டது என்று நன்றாக விளங்கும்.

இதை மறைப்பதற்காக, அச்சுப் பிரசார கர்த்தாக்கள் பல முயற்சிகள் செய்யலாம். லார்டு ஹா-ஹா பழைய பொய் வேஷங்களை புதிய சின்னங்களுடன் போட்டுக் கொள்ளலாம். டாக்டர் கோபல்ஸ் பழைய மண் கிண்ணியை எடுத்துக் கொண்டு அச்சு வானொலி நிலையங்கள் மூலம் பொய்ப் பிரசார சங்கீதத்தில் ஈடு படலாம். ஆனால் கோபல்சின் மண் கிண்ணியின் ஒளியும், ஒலியும் எப்படிப்பட்டவை என்று உலகம் அறியும்.

—சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ஜூலை 20-ம் தேதி ராவ் சாஹிப் டி. ஏ. வி. நாதன் ஒலி பெருக்கிய பிரசங்கம்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆகவே இந்தப் புதிய ஆயுதத்தை வெல்லத்தக்க முறையைக் கண்டு பிடிக்க பிரிட்டன் எல்லா வகைகளிலும் முயற்சிக்கும். இப்போது ஜெர்மனியின் புதிய ஆயுதத்திற்கும் பிரிட்டனின் புதிய எதிர்ப்பு ஆயுதத்திற்கும் போராட்டம் ஆரம்பமாகி விட்டது."

இதற்கு முந்திய ஜெர்மன் இரகசிய ஆயுதங்களின் கதி என்னவானது என்பது தெரிந்ததே, காந்தச் சுரங்க வெடிகள் 'ராக்கெட்' வெடி குண்டுகள் ரேடியோவால் இயங்கும் டாங்கிகள் முதலியவற்றைக் கையாண்டார்கள். இவை எல்லாவற்றையும் தக்கபடி வெல்லத் தக்க முறைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தான் இவற்றைக் கண்டு பிடித்தார்கள். ஆகவே இதற்கும் தக்க தடைகளைக் கண்டு பிடிப்பார்களென்று நாம் நிச்சயமாக நம்பலாம். இது புதியதோர் ஆயுதமல்ல. 1936-ம் வருஷத்திலேயே ரேடியோவைக் கொண்டு இயங்கும் விமானம் கட்டுவதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இது ஒரு ரகசிய ஆயுதமல்ல; எப்படி யென்றால், இதுபோன்ற விமானங்களை சாலெர்னோவில் ஜெர்மானியர்கள் நேசப் படைகள் மீது உபயோகித்தனர்.

பிரிட்டிஷ் விமானங்களைக் கட்டும் மிஸ்டர் மைல்ஸ், ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறார். விமானியில்லாத விமானங் கட்ட வேண்டு மென்று கொண்டு வரப் பட்டதோர் ஆலோசனையைத் தான் நிராகரித்து விட்டதாகவும், அதற்குக் காரணம் பாகுபாடற்ற முறையில் அது பயன்படும் என்பதுதா னென்றும் தெரிவித்திருக்கிறார். ஆகவே, இது ஜெர்மானியர்களே கண்டு பிடித்த ஆயுதமல்ல.

நினைவும், கனவும்

சாதாரணமாக கனவு நினைவாயிற்றென்றால் நன்றாகவே இருக்கும். (கனவிலே வரும் நல்ல விஷயங்களைப் பற்றி மட்டுமே குறிப்பிட விரும்புகிறோம்), ஆனால் நினைவு வெறுங் கனவாக மாறி விடுவதென்றால் யாருக்கும் ரொம்பக் கஷ்டமாகத் தானிருக்கும். உதாரணத்திற்கு, நாஸிகளையும், ஜப்பானியர்களையும், முஸோலினியின் சகாக்களையும் எடுத்துகொள்ளுங்களேன். அவர்கள் என்னவெல்லாமோ மனக் கோட்டை கட்டி வைத்திருந்தார்கள். அதன் பிரகாரம் காரியங்கள் நடந்திருந்தால், அவர்கள் தான் இவ்வுலகிற்கு எஜமானர்களாகியிருப்பார்கள், ஆனால் நடந்ததென்ன ?

முஸோலினி என்னவானார் ?

அவர்கள் நினைத்த நினைவுகளெல்லாம் 'புஸ்' என்று கனவுபோல் பலனற்றுப் போய் வருகின்றன. இத்தாலியை இன்னும் பெரிய சாம்ராஜ்யமாக்கி, மத்யதரைக் கடலுக்குத் தானே ராஜாவாக ஆகவேண்டுமென முஸோலினி மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார். "உள்ளதும் போச்சு நொள்ளக் கண்ணா, அதுவும் போச்சு அரோஹரா" என்ற கதையாக, இத்தாலிக்கு ஆபிரிகாவில் புதிதாகக் கிடைத்திருந்த பிரதேசத்தோடு, எற்கெனவே இருந்த பிரதேசங்களும் போய், மூல இத்தாலியிலும் பாதிக்கு மேல் தாரை வார்ந்து போய்விட்டது. பதவி யிழந்து, உலகோரால் காரி உமிழப் பெற்று, இருக்கும் இடம் தெரியாமல் கிடக்கும் நிலையை அடைந்தார், ஒரு காலத்தில் ஆடி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த முஸோலினி.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

இத்தாலியிலே இன்று நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால், நாளைக்கே இல்லாவிட்டாலும், சில மாதங்களிலோ, அல்லது ஒரு வருஷத்திற்குள்ளாகவோ, இத்தாலிப் போர் தீர்ந்துபோகும் போல்தானிருக்கிறது. ஜெர்மன் சேனாதிபதி கெஸல்ரிங் மேற் கொண்டு படைகளைக் கொண்டுவந்து தள்ளிக் கொண்டுதானிருக்கிறாராம். எப்படியாவது, நேசப் படைகளின் முற் போக்கை, சாத்தியமான வரை தாமதப் படுத்தி வைக்க வேண்டுமென்பதே, அவரது நோக்கமாக இருக்கலாம். மழை ஒரு பக்கம் அவருக்குக் கொஞ்சம் துணை புரிகிறது. ஆனாலும் நேசப் படைகளுக்கு எங்குமிருப்பதைப் போல், இங்கும் விமான பலம் அதிகமாக இருக்கிறது. அதோடு, அப்படைகள் முன் வைத்த காலைப் பின் வைப்பதாக இல்லை. என்ன தடங்கல் இருந்தாலும் அவர்கள் திகைத்து நிற்பதாக இல்லை. தடங்கலைத் தகர்த்துக் கொண்டு முன்னேறுவதிலேயே குறியாக இருக்கிறார்கள். ஆகவே, ஜெர்மானியர் தங்களைச் சமாளித்துக் கொண்டு, ஆங்காங்கே நின்று எதிர்க்கவும் வகையில்லாது போய் விடுகிறது. ஓரே ஓட்டமாக ஓடிக் கொண்டே இருக்கும் நிலைமை அவர்களுக்குப் பிடிக்காது. ஆனாலும் தலைவிதியை மீற அவர்களால் ஆகுமா என்ன ? முற் பகல் விதைத்தது பிற் பகலில் விளைகிறது. 1939, 1940, 1941-ல் அவர்கள் எப்படி அனாதரவான மக்களை அடித்து நொறுக்கிக் கொண்டு முன்னே போய்க் கொண்டிருந்தார்களோ, அதே போல் இன்று அவர்களை நேசப் படைகள் அடித்து விரட்டிக் கொண்டிருக்கின்றன. இத்தாலிக்குள் கொணர்ந்து தள்ளப்படும் படைகளும், ஆயுதங்களும் பாழாகுமே ஒழிய, நாஸிகளுக்கு அங்கு வெற்றி என்பது கிடைக்கப் போவதில்லை. ஆயினும் அவர்கள், நேசப் படைகளை ராஜ பாட்டையில் ஒடுவதைப் போல் ஓட விடப் போவதில்லை.

முப்புரப் படையெடுப்பு

இப்பொழுது ஜெர்மனியின் தலை நகரான பெர்லினை நோக்கி முப்புரங்களிலிருந்து படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரி நடக்கப் போகிறதென்று ஹிட்லரும் அவரது சகாக்களும் கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். ஐரோப்பாவையும் ருஷ்யாவையும் தானும் முஸோலினியும் பங்கிட்டுக் கொள்ளப் போவதாகவும், சீனாவையும், பர்மா, மலேயா, இந்தியா, மற்றும் ஆஸ்திரேலியா பக்கத்தில் உள்ள பிரதேசங்களையும் ஜப்பான் கட்டி ஆளப் போவதாகவும், அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

சர்வாதிகார நினைவில் மண்

ருஷ்யா வெறும் சொத்தை நாடு. ஓங்கி ஒரு அறை அறைந்தால், பொத்தென்று விழுந்து விடும் என ஹிட்லர் நினைத்தார். ஆனால், அதிசயக் கதை ஒன்றில் நடந்ததைப் போல், அதாவது ஒரு பானையின் மூடியைத் திறந்ததும் பெரும் புகையும், அதனூடே ஒரு பிரம்மாண்டமான பூதமும் தோன்றியது போல ருஷ்யா மீது கை வைக்கப் போக, ஹிட்லரின் சர்வாதிகார நினைவிலே மண் விழுந்ததோடு, ருஷ்யாவிலே பெரும் பூதம் ஒன்று தோன்றி, சிறந்த நாஸி வீரர்களையும், வாலிபர்களையும் பலியாகக் கொண்டு விட்டது. ருஷ்யர்களின் அபார சகிப்புத் தன்மையும், ஆபத்து தலைக்கு மேல் மீறி வந்த காலத்தும் அஞ்சாதிருக்கும் திட நெஞ்சமும், சகல நஷ்டங்களையும் லாப மாக்க உதவி புரிந்தன. ஜெர்மனியின் ராணுவ பலமும், ஜெர்மனியைப் பற்றி உலகோருக்கிருந்த உயர்ந்த அபிப்பிராயமும் ஊசியால் குத்தப் பெற்ற பலூன் மாதிரி மாறி விட்டன.

கொஞ்சமான நஷ்டமா இது !

ருஷ்ய யுத்தம் ஆரம்பமாகி மூன்று வருடங்கள் முடியப் போகின்றது. இந்த மூன்று வருட காலத்திலே, ஜெர்மானியர் 78 லக்ஷம் பேர்களை இழந்திருக்கிறார்கள். இந்த ஒரு போர் முனையில் மட்டும் அவர்கள் எழுபதாயிரம் டாங்கிகளையும், அறுபதாயிரம் விமானங்களையும், தொன்னூறாயிரம் துப்பாக்கி, பீரங்கிகளையும் பறி கொடுத்திருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையை சோவியத் செய்தி இலாகா வெளியிட்டிருக்கிறது. இதை வாசிக்கும் பொழுது யாருக்கும் 'திக்' என்று தானிருக்கும். நஷ்டமான நஷ்டமா இது ? ஐயோ ! ஒரு குழந்தை பிறக்கவேண்டுமென்று ஒவ்வொரு தாய்மாரும் எத்தனைத் தவங் கிடக்கிறார்கள் ! என்னென்ன நோன்புகள் நோற்கிறார்கள் ! அப்படி யிருக்க, மூன்றே வருடங்களில் முக்கால் கோடிப் பேர்களுக்கு அதிகமாக மண்ணோடு மண்ணாவதென்றால், எத்தகைய நஷ்டம் இது !

ருஷ்ய யுத்தம் ஹிட்லரது எண்ணங்களைக் கனவாக்கியதோடு மட்டுமின்றி, இந்த இரண்டாவது மகா யுத்தத்தின் போக்கையே மாற்றி விட்டது. தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்ப்ரசண்டனாகிவிட மாட்டானா ? ருஷ்யா மட்டும் துருக்கி மாதிரி, ஸ்பெயின் மாதிரி, ஸ்வீடன் மாதிரி, இருந்திருந்தால் ஹிட்லர் படுத்துகிற பாடே தனியாக இருந்திருக்குமே !

ருஷ்யாவை கபளீகரம் பண்ண ஹிட்லர் நினைத்தது போய், இப்பொழுது ருஷ்யா தன்னையும் ஜெர்மனியையும் சும்மா விட்டு விட்டால் போதும் போலிருக்கும் ஹிட்லருக்கு.

புதுத் தாக்குதல் ஆரம்பம்

நடுவிலே சிறிது காலம் ஓய்வு கொடுத்திருந்த ஸ்டாலின், தமது புதுத் தாக்குதலை ஆரம்பித்து விட்டார். வெள்ளை ருஷ்யாவில் உள்ள விடப்ஸ்க், மின்ஸ்க் ஆகிய நகரங்களை ருஷ்யர்கள் கைப் பற்றி விட்டார்கள். ஜெர்மானியருக்கு இவ ரொம்ப உதவியாக இருந்தன. ருஷ்யர்கள் இதோடு நின்று விடவில்லை. வெள்ளை ருஷ்யாவிலே இருந்தே நாஸிகளை விரட்டி விட முயன்று கொண்டிருக்கிறார்கள் ! ஜெர்மானியரும் தங்கள் சமர்த்தை யெல்லாம் காட்டிப் பார்க்கிறார்கள். ஆனாலும் ருஷ்யர்களது போர் முறையை அவர்களால் சரியாகக் கண்டு கொள்ள முடியவல்லை. அங்கு மிங்கும் படைகளை இடம் மாறச் செய்து கொண்டு திணறுகிறார்கள். ஓரிடத்தில் தங்கள் பலத்தை ஜெர்மானியர் பெருக்கினால், அதைச் சுற்றியுள்ள இடத்திலே ஓட்டை விழச் செய்துவிடுகிறார்கள் ருஷ்யர்கள்.

நேசக் கட்சியார் நோக்கம்

வெள்ளை ருஷ்யாவை ஜெர்மானியர் இழந்தால், அசல் ஜெர்மனியை யுத்தம் அணுகிவிடும். அதை ஹிட்லர் சிறிதும் விரும்பமாட்டார். அவர் விரும்புகிறாரா இல்லையா என்பதையா பிறர் இப்பொழுது கவனிக்கிறார்கள் ? சீக்கிரமே ஜெர்மனியைச் சிதற அடித்து, ஹிட்லர் குழாத்தை ஒழித்து, உலகிலே சமாதானத்தை நிலை

(10-ம் பக்கம் பார்க்க)

இந்திய பாதுகாப்புச் சட்டப்படி பிறந்த கட்டளைகள்

இராமனாதபுரம் கலெக்டர் ஆபீசு,
மதுரை, 1944-ம்௵ மார்ச்சு௴ 1௳.

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்கள் சப்ளை செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகி விட்டது. ஆகவே நெல், அரிசி ஆகியவற்றை திரட்டி வைப்பதும், அவற்றின் போக்கு வரவுகளைச் சீர்ப்படுத்துவதும் இராமனாதபுரம் ஜில்லாவில் மிகவும் அவசியம்.

இராமனாதபுரம் ஜில்லா கலெக்டரும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுமாகிய ராவ்சாஹிப் கே. பி. கிருஷ்ணன் நாயர் என்னும் நான், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தில் 81 (2)-எ விதிப்படி 1942-ம்௵ ஜனவரி௴ 21௳ யிட்ட 243-ம் நெம்பர் (பப்ளிக்) யுத்த இலாக்காக் கட்டளைப்படி, எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு கீழ்க்கண்ட கட்டளையைப் பிறப்பிக்கிறேன் :—

கலெக்டர் அல்லது சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்களிடம் அனுமதிச் சீட்டுப் பெற்றிருந்தாலல்லது, சிவகாசி டிவிஷனைச் சேர்ந்த ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவிலிருந்தும், தேவக்கோட்டை டிவிஷனைச் சேர்ந்த சிவகெங்கை தாலூகாவிலிருந்தும், இராமனாதபுரம் டிவிஷனைச் சேர்ந்த பரமக்குடி தாலூகாவிலிருந்தும், அந்தந்தத் தாலூகா எல்லைக்கு வெளியே, நெல், அரிசி, அவற்றினின்று பெறப்படும் தவிடு முதலியவற்றை இந்த கட்டளை பிறக்கும் தேதி முதல், கொண்டு போகக்கூடாது.

இந்தக் கட்டளையை மீறுகிறவர்கள் 3 வருஷக் காவல் தண்டனைக்கோ அல்லது அபராதத்திற்கோ அல்லது இரண்டிற்குமோ உள்ளாக நேரும்.

(ஒப்பம்) கே. பி. கிருஷ்ணன் நாயர்,
கலெக்டரும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும்.

மதுரை, 1943-ம்௵ டிசம்பர்௴ 18௳.

இந்த ஜில்லாவில் தேவைப்படுகிற அளவிற்கு பருப்பு வகைகளைத் திரட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 81 (2) விதிக்குட்பட்டு சென்னை அரசாங்கத்தாரின் 1942-ம்௵ ஜனவரி௴ 21௳ய நெ. 243 (பப்ளிக்) யுத்த இலாகா உத்திரவுப்படி மதுரையிலுள்ள இராமனாதபுரம் கலெக்டரான ராவ்சாஹிப் ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் என்னும் நான், கீழ்க் கண்ட கட்டளையைப் பிறப்பிக்கிறேன் :—

சென்னை சிவில் சப்ளை கமிஷனரிடமிருந்தாவது, இராமனாதபுரம் கலெக்டரிடமிருந்தாவது இது பற்றி அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் வேறு யாரிடமிருந்தாவது அனுமதி பெற்றிருந்தாலல்லது, இந்த ஜில்லாவிலுள்ள எந்த ஊரிலிருந்தும் இந்த ஜில்லாவிற்கு வெளியே இந்தியாவில் வேறெந்த இடத்திற்கும் கொள்ளு, தட்டைப் பயறு, மணிப் பயறு, கோட்டைப் பயறு ஆகிய எதையும் எற்றுமதி செய்யலாகாது.

(ஒப்பம்) கே. பி. கிருஷ்ணன் நாயர்,
கலெக்டர்.

மதுரையிலுள்ள இராமனாதபுரம் கலெக்டர் ராவ்சாஹிப் ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் அவர்கள், பி.எ., 1944-ம்௵ பிப்ரவரி௴ 10௳ பிறப்பித்த கட்டளை.

சிவில் சப்ளைகள்—தானிய வகைகள்—சோளமும், கம்பும்—உயரிய விலை—நிர்ணயம்—பூர்வாங்க மொத்த விற்பனைச் சந்தைகள்.

பார்வையிட்ட தஸ்தாவேஜுகள் :—

1944-ம்௵ ஜனவரி௴ 21௳ யிட்ட 282-ம் நெம்பர் அரசாங்க உத்திரவு.

1944 ம்௵ ஜனவரி௴ 22௳ யிட்ட 13/44-ம் நெம்பருள்ள போர்டு தீர்மானம்.

கட்டளை

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 81-வது விதி, 2-வது உள் விதி, (பி) பகுதியின்படி, 1944-ம்௵ ஜனவரி௴ 21௳ யிட்ட அரசாங்க டெவெலெப்மெண்ட் இலாகாவின் 282-ம் நெம்பர் கட்டளைப்படி, இராமனாதபுரம் கலெக்டராகிய ராவ்சாஹிப் ஸ்ரீ கே. பி. கிருஷ்ணன் நாயர் என்னும் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, கீழ்க்கண்ட கட்டளையைப் பிறப்பிக்கிறேன் :—

2. கீழே காணப்படும் அட்டவணையின் 1-வது பத்தியில் காணப்படும் பூர்வாங்க மொத்த விற்பனைச் சந்தைகளில் 2-வது பத்தியில் குறிப்பிட்டிருக்கும் விலைகளை விட அதிக விலைக்கு யாரும் விற்கலாகாது.

3. இந்தக் கட்டளையை மீறியதாகக் கொண்டுவரப்படும் வழக்குகளை விசாரிக்கும் கோர்ட்டார்கள், வழக்கு உண்மையானது தானென்று நம்புவார்களானால், வழக்கில் சம்பந்தப்பட்ட எந்தச் சொத்தையும் பறிமுதல் செய்துவிடலாம்.

அட்டவணை

பண்டங்கள்.	ஒரு இம்பீரியல் மனு விலை. ரூ. அ. பை.	பூர்வாங்க மொத்த விற்பனைச் சந்தைகள்.
சோளம் (புதியதும் பழையதும்).	7 0 0	1 அருப்புக்கோட்டை.
		2 கமுதி.
		3 பாமக்குடி.
		4 சாத்தூர்.
கம்பு	7 8 0	5 சிவகாசி.
		6 விருதுநகர்.
		7 இராஜபாளையம்.
		8 ஸ்ரீவில்லிபுத்தூர்.
		9 காரைக்குடி.

இராமனாதபுரம் கலெக்டர் ஆபீஸ்
மதுரை, 1944-ம்௵ மே௴ 19௳.

பார்வையிடப்பட்ட தஸ்தாவேஜிகள் :—

1944-ம்௵ ஜனவரி௴ 21௳யிட்ட 282-ம் நம்பர் அரசாங்கக் கட்டளை.

1944-ம்௵ ஜனவரி௴ 21௳யிட்ட, மிஸ். 13/44-ம் நம்பருள்ள போர்டு தீர்மானம்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 81-வது விதி 2-வது உள் விதி (b) பகுதியின்படி, 1944-ம்௵ ஜனவரி௴ 21௳யிட்ட அரசாங்க டெவலப்மெண்ட் இலாக்காவின் 282-ம் கட்டளைப்படி, தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு இராமனாதபுரம் கலெக்டர் கீழ்க்கண்ட கட்டளையைப் பிறப்பிக்கிறார் :—

2. பூர்வாங்க மொத்த விற்பனைச் சந்தைகள் தவிர வேறெந்த சந்தையிலும், அந்தந்த சந்தைகள் சம்பந்தமாக 2, 3 பத்திகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் உயரிய விலைகளுக்கு அதிகமாக சோளத்தையோ, கம்பையோ யாரும் விற்கக் கூடாது.

3. இந்தக் கட்டளையை மீறியதாகக் கொண்டு வரப்படும் வழக்குகளை விசாரிக்கும் கோர்ட்டார்கள், வழக்கு உண்மையானது தானென்று நம்புவார்களானால், வழக்கில் சம்பந்தப்பட்ட எந்தச் சொத்தையும் பறிமுதல் செய்து விடலாம்.

பூர்வாங்க சந்தையல்லாதவற்றின் பெயர்.		1 மனு சோளத்தின் உயரிய விலை. ரூ. அ. பை.	1 மனு கம்பின் உயரிய விலை. ரூ. அ. பை.
இராமனாதபுரம் டிவிஷன்			
இளையாங்குடி	..	7 10 4	8 2 3
சத்திரக்குடி	..	7 8 3	8 0 3
பார்த்திபனூர்	..	7 8 3	8 0 3
சாலைக்கிராமம்	..	7 11 3	8 3 3
முதுகளத்தூர்	..	7 13 3	8 5 3
கடலை ..	..	7 11 3	8 3 3
சாயல்குடி	..	7 13 3	8 5 3
சிக்கல் ..	..	7 15 3	8 7 3
இராமநாதபுரம்	..	7 8 3	8 0 3
கீழக்கரை	..	7 13 3	8 5 3
இராமேஸ்வரம்	..	7 9 6	8 1 6
மண்டபம்	..	7 8 9	8 0 9

(10-ம் பக்கம் பார்க்க)

அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யுங்கள்

அரசாங்க உதவியும் பொது மக்கள் கடமையும்

மிஸ்டர் எஸ். கிருஷ்ணன்

“அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யுங்கள்” என்று சொன்னவுடனே “இது விவசாயிகள் சம்பந்தப்பட்ட விஷயந்தானே; நமக்கென்ன” வென்று உத்தியோகஸ்தர்களும் வியாபாரிகளும், இதர பொது மக்களும் நினைத்து விடக்கூடாது. உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒவ்வொருவரும் செய்யவேண்டிய காரியங்கள் உள்ளன. எல்லோரும் இது விஷயத்தில் கட்டாயம் அக்கரை காட்டினால் தான், சிக்கல்களும், சங்கடங்களும் தீரும். ஆண் பெண் இரு பாலரும் உணவு உற்பத்தியில் உதவ அனேக இலகுவான வழிகள் உண்டு. அந்த வழிகளை ஒவ்வொருவரும் பின்பற்றுவோமாகில் நமது, கஷ்டங்களில் முக்கால்வாசி தீர்ந்து போகும் என்று சொல்வது மிகை யாகாது.

தப்பு அபிப்பிராயம்

உணவுப் பிரச்சினை சம்பந்தமாக பொது மக்களிடம் இருந்து வரும் ஒருவிதத் தப்பு அபிப்பிராயத்தை முதலில் அகற்ற விரும்புகிறேன். அதாவது நேச நாட்டினருக்கும் நம்மை ஜப்பானிய ஆக்கிரமிப்பி லின்றும் காப்பாற்ற இந்தியாவுக்குள் வந்திருக்கும் படைகளுக்கும், நாம் ஆகாரப் பொருள்களை அதிகமாக வழங்கி விடுவதனால் தான், பொது மக்களுக்குப் போதிய உணவுப் பொருள்கள் கிடைக்க வில்லை என்று ஒரு வித வதந்தியை வெறும் புரட்டு என்று புள்ளி விவரங்களுடன் ஸ்தாபிக்க முடியும்.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு.

சென்ற வருஷம் வெளி நாடுகளுக்கும் இந்தியாவிலுள்ள ராணுவத்தினருக்கும் ஏற்றுமதி செய்ததும், அளிக்கப்பட்டதுமான அரிசி, இந்தியாவின் மொத்த விளைவில் 100-க்கு 2 சத விகிதம் கூட இல்லை. இந்த இரண்டு சத விகிதத்திலும், நமது இந்தியப் படையினருக்கு வேண்டிய அரிசியும் சேர்ந்திருக்கிறது என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் போர் வீரர்கள் ராணுவத்தில் சேரா திருந்தாலும் நம் நாட்டில் விளையும் ஆகாரப் பொருள்களைத் தான் உண்பார்கள். நிற்க, ராணுவப் படையினர் சும்மா யிருக்க வில்லை. காய் கறிகள், தான்யங்கள், பழ வர்க்கங்கள் முதலியவற்றைப் பயிர் செய்வதற்காக அவர்கள் நேரடியாக முனைந்து ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை பொது மக்கள் நன்கு உணர வேண்டும். ஆகவே, தற்போதைய உணவுப் பொருள் பிரச்சினைக்குக் காரணம் ஆகாரப் பொருள்களை ராணுவத்தாருக்கு அதிகப்படியாக வழங்கி வருவதனால் தான் என்று நினைப்பது, சுத்தத் தவறு என்று புலப்படுகிற தல்லவா? அந்த எண்ணம் உண்மைக்கு மாறானது. விஷயம் தெரியாதவர்களால் கற்பிக்கப்பட்ட வதந்தியே யாகும். எனவே, உணவுப் பொருள் நஷ்டங்களுக்கு ராணுவத்தினர் தான் காரணம் என்று கருதுவது “மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதற்கு” ஒப்பாகும்.

உணவுப் பொருள் நெருக்கடி ஏற்படவும், “உணவுப் பொருள்களை அதிகமாக பயிர் செய்யுங்கள்” என்ற விசேஷப் பிரசாரம் செய்ய வேண்டியதற்கும் காரணம் யாது என்று கேட்கின்றீர்கள். சரியான கேள்வி. உண்மையான காரணங்களை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அவைகளைத் தெரிந்து கொண்டால் சரியான முறைகளைக் கையாண்டு கஷ்டங்களைப் போக்க முடியும்.

கஷ்டங்களுக்குக் காரணம்

அகில இந்தியப் பிரச்சினையாக நாம் நோக்கினால் இந்த உணவுக் குறைபாட்டுக்கு ஜனத் தொகை விஸ்தரிப்பு ஒரு காரணம். 1650-ம் வருஷம் இந்தியாவில் ஜனத் தொகை 10 கோடி; 1941-ம் வருஷத்தில் 38 கோடியே 80 லட்சம்; இன்று 40 கோடி இருக்கலாம். ஜனத் தொகை எந்த அளவுக்கு அதிகமாகிப் வந்ததோ அந்த அளவுக்கு விவசாய அபிவிருத்தி ஏற்பட வில்லை. விளைபொருள்கள் ஜனப் பெருக்கத்துக்குத் தக்கபடி உற்பத்தி செய்யப்பட வில்லை. எனவே இயற்கையாகவே உணவுப் பொருள் தட்டு இருந்து வந்தது. யுத்தம் காரணமாக அது அதிகப்பட்டு விட்டது. அவ்வளவு தான். ஏன்? நம் மக்கள் பர்மா, சீயம், இந்தோ-சீனா முதலிய நாடுகளிடமிருந்து அரிசி இறக்குமதி செய்து கொண்டிருந்ததற்குத் தற்காலிகமாகத் தடை ஏற்பட்டது. இத்தடை ஒரு நெருக்கடியை உண்டாக்கி விட்டது.

அரிசி உற்பத்தியும் இறக்குமதியும்

நமது மாகாண சம்பந்தப்பட்ட மட்டில், நமக்கு முக்கியமான உணவுப் பொருள் அரிசி. சாதாரண சமாதான காலத்திலேயே, நம் மாகாணத்தில், விளையும் அரிசி நமக்குப் போதாது. ஆகையால் சீயம், பர்மா, இந்தோ-சீனா முதலிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். சென்னை மாகாணத்தில் 1931-35-ம் வருஷங்களில் சராசரி 60 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகி வந்தது. ஆனால் 1936-37-ம் வருஷ முதல் 1940-41-ம் வருஷம் வரையில் சராசரி 46 லட்சம் டன் தான் விளைவு. ஆகவே வெளிநாடுகளிலிருந்து தான் நாம் அரிசி தருவிக்க வேண்டி இருந்தது. 1936-37-ம் வருஷ முதல் 1940-41-ம் வருஷம் வரையில் வருஷந் தோறும் 4 லட்சம் டன் அரிசி வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். அன்றியும் ரயில் மார்க்கமாகவும் வங்காளத்திலிருந்தும், ஒரிஸ்ஸாவிலிருந்தும் சராசரி வருஷத்துக்கு இரண்டு லட்சம் டன் வரவழைத்தோம். யுத்தங் காரணமாக, பர்மா முதலிய விடங்களிலிருந்து வந்து கொண்டிருந்த 4 லட்சம் டன் அரிசி நின்றுவிட்டது. இதர மாகாணங்களிலிருந்து கிடைத்து வந்த இரண்டு லட்சம் டன்களும் போக்கு வரத்துக் கஷ்டங்களால் பாதிக்கப்பட்டது. இப்படியே எல்லாவித தானியங்களுக்கும், ஒரு வித நெருக்கடி ஏற்பட்டு விட்டது. அரிசி வகையில் சுமார் 6 லட்சம் டன் வருஷத்துக்கு கிடைக்க வழி தேட வேண்டியிருக்கிறது. இக்காரணங்களினால் தான், உணவுப் பொருள் நெருக்கடி ஏற்பட்டது. “அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யுங்கள்” என்ற தீவிர பிரசாரம் செய்வதற்கும் அத்யாவசியமும் ஏற்பட்டது.

நமது முக்கிய உணவுகள்

நமக்கு முக்கியமான ஆகாரப் பொருள்கள் என்ன? அரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம், காய்கறிகள், உளுந்து, பருப்பு வகைகள், மிளகாய், எண்ணெ வகையறுக்கள். இவற்றைத் தேவைக்குத் தக்கபடி அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகள் என்ன? சாகுபடி செய்யக் கூடிய நிலங்கள் வேண்டும். அல்லது சாகுபடிக்கு லாயக்காக திருத்தப்படக் கூடிய நிலங்கள் வேண்டும். போதிய நீர்ப்பாசன வசதிகள் வேண்டும்; நல்ல விதை வேண்டும்; நல்ல எருவும் மேலான விவசாயக் கருவிகளும் அவசியம் வேண்டும். உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்யத் தக்க வசதிகள் வேண்டும்.

அதிகச் சாகுபடிக்கு அரசாங்க உதவி

இவற்றின் ஒவ்வொன்றின் அவசியத்தைப் பற்றியும் அரசாங்கத்தினர் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். இவைகளைப் பொது மக்களுக்கு அளிப்பதற்காக மத்திய அரசாங்கத்தார்கள் எவ்வளவோ ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். சாகுபடி செய்வதற்கு உங்களுக்கு அதிக நிலம் தேவையா யிருந்தாலும் நிலமே இல்லாதிருந்து உணவுப் பொருள்கள் சாகுபடி செய்ய நிலம் தேவையா யிருந்தாலும், நீங்கள் அவற்றை அடைய அரசாங்கத்தார் அநேக வசதிகளையும் சலுகைகளையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். நீர்ப் பாசன வசதிகளை அதிகப்படுத்தத் தனிப்பட்ட விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிறார்கள்,

நீர் தீர்வைகளைக் குறைத்திருக்கிறார்கள். தீர்வையே இல்லாமலும் சில சலுகைகள் காட்டுகின்றனர். எரு கால்நடைகள், விவசாயக் கருவிகள், நல்ல விதைகள் முதலியன வாங்கக்கடன் கொடுத்து உதவுகிறார்கள். இப்படிப் பல வழிகளில் உங்களுக்கு தேவையான சௌகரியங்களைச் செய்து கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். இது சம்பந்தமான முழு விவரங்களும் வேண்டுவோர் ஆங்காங்குள்ள ஜில்லா, டிவிஷன் விவசாய அதிகாரிகளிடம் இருந்து தெரிந்து கொள்ளலாம். அதிகாரிகள் தங்களாலான சௌகர்யங்களை விவசாயிக்குச் செய்து வைக்க ஊக்கத்துடன் வேலை செய்கிறார்கள்.

சென்னையில் உணவுப் பொருள் அபிவிருத்தி.

இந்த உணவுப் பொருள் உற்பத்தி அபிவிருத்தி இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து சென்னை மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகளைக் கவனிக்கலாம். உயர்தர நீர்ப்பாசன திட்டங்களுக்காக 52 லட்சம் ரூபாயும் சிறு திட்டங்களுக்காக 12 லட்சமும் செலவு செய்திருக்கின்றனர். தற்காலிகக் கடன் 26½ லட்சம் கொடுத்திருக்கின்றனர். நிலத் தீர்வை சலுகை சம்பந்தமாக லட்சத்து அறுபதினாயிரம் செலவு செய்திருக்கின்றர். சுமார் 10 லட்சம் எக்கர் அதிகப்படி நிலம் சென்ற ஐந்து வருஷங்களுக்குள் சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்யப்பட்டிருக்கிறது. 1348-ம் பசலியில் சாகுபடிக்குட்பட்டிருந்த நிலத்தின் விஸ்தீர்ணம் 270 லட்சம் எக்கர்கள். 1353-ம் பசலியில் சாகுபடி செய்யப்பட்ட நிலப் பரப்பு 280 எக்கர்கள். இதனாலேற்பட்ட அதிகப்படி விளைவைப் பற்றி திட்டமான கணக்குச் சொல்ல முடியாது. மொத்த மகசூல் எல்லா உணவுப் பொருள்கள் உள்பட 1938–39-ம் வருஷம் சுமார் 97 லட்சம் டன்கள். 1942–43-ல் சுமார் ஒரு கோடியே மூன்று லட்சம் டன்கள். அதாவது சுமார் 6 லட்சம் டன்கள் அதிகம். 1943-44-ம் வருஷம் எதிர்பார்க்கப்படும் மகசூல் ஒரு கோடியே எட்டு லட்சம் டன்கள்.

பொது மக்கள் கடமை.

விவசாய இலாகாவுக்காக அரசாங்கத்தார் ஒதுக்கி வைத்திருந்த தொகை ஒவ்வொரு வருஷத்திலும் முன் வருஷத்தை விட அதிகரித்துக்கொண்டே வருகிறது. எனவே எல்லோரும் உணவுப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்த முற்பட வேண்டும். கவர்னர் மாளிகையில் உல்லாச நந்தவனங்களாக இருந்து வந்த இடங்களெல்லாம் இப்பொழுது காய் கறி, பழவர்க்கங்களாக மாறியுள்ளன. விவசாயிகள் தவிர உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும் இதரர்களும் இந்த வேலையில் யீடுபட்டுத் தாமும் நல்ல பலனை அடைந்து, பிறருக்கு உபகாரமாயிருக்கலாம். எபபடி ? முதலில் பொருள்களை வீணாக்காமல் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும். அனாவசியமாக அளவுக்கு மிஞ்சி சேமித்து வைக்கக்கூடாது. வீடுகளில் கொல்லைப் புறத்தில் காய்கறிகளைப் பயிரிடுவது வெகு சுலபம். விளையாட்டாக வேலை செய்து ருசிகரமான காய் கறிகளைப் பெறலாம். ஆடிமாதம் பிறக்கப் போகிறது. குழந்தைகள் முதல் பெரியோர் வரை தோட்டங்களிலும் கொல்லைகளிலும் பயிற்குழிகள் வெட்டி பண் படுத்தி வைத்து, புடலை, அவரை, வெண்டை, முள்ளங்கி முதலிய காய்கறிகளைப் பயிர் செய்யலாம். சீக்கிரம் மழை காலம் வந்துவிடு மாகையால் அதிகக் கஷ்ட மில்லாமலே நிறையக் காய்கறிகள் சாப்பிட்டு பண லாப மடைவதுடன் தேகாரோக்கியத்தையும் விருத்தி செய்து கொள்ளலாம். தேசத்துக்கும் சமூகத்துக்கும் சேவை செய்தவர்களாவோம். "கரும்புத் தின்ன கூலி வேண்டுமா" ? நமக்குத் தேவையான பொருள்களை நாமே செய்து கொள்ளக் கூடுமானால், ஏன் தயங்க வேண்டும் ? "சிறு துளி பெரு வெள்ளம்" ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச் செய்வார்களேயானால் பிரமாண்டமாகத் தோன்றும் காரியமும் சுலபமாக மாறி வி ம்.

[சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ஜூன் மாதம் 20-ம் தேதி ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்.]

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

நாட்ட வேண்டு மென்பதல்லவா நேசக் கட்சியினரின் நோக்கம்.

அமெரிக்கர்கள் இப்பொழுது செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றும் பிரமாதமாயிருக்கின்றன. சீமையிலிருந்து, ருஷ்யாவிற்கு தங்கள் போர் விமானங்களையும், வெடி விமானங்களையும், நடுவில் எங்கும் தங்காமல் கொண்டு சேர்த்திருக்கிறார்கள் அவர்கள். வழியிலே ஜெர்மனி மீதும் அட்சதை தூவுவது போல் குண்டுகளை உதிர்த்து விட்டுப் போயிருக்கிறார்கள். தாக்க முடியாதது ஜெர்மன் கோட்டை என்று எண்ணி யிருந்த ஹிட்லருக்கு இது ஒரு அடி.

பெரிய சாகஸங்கள்.

இது மட்டுமா? நேச தேசத்தினரின் படைகள் நார்மண்டியில் வந்திறங்கியதும், ஜெர்மானியரைத் திணற அடித்ததும், அவர்களது படைகளுக்குப் பின்னால் விமானப் படைகளைக் கொண்டு வந்து இறக்கியதும், ஷெர்பூர்க் துறைமுகத்தையும் வட பிரான்ஸில் ஒரு சிறு பகுதியையும் கைப்பற்றியதும் பெரிய சாகசங்களா அல்லவா ?

நாஸிகள் தமது சாதாரண வழிகளைத் தவிர, விசேஷ வழிகளையும் கையாளத் தொடங்கி விட்டனர். ஆளில்லாத விமானம், நூதன வெடி குண்டுகள் இவையெல்லாம் சேத மிழைத்த போதிலும், நேச தேசத்தினரைத் திகைக்க வைக்கவில்லை. இதைக் கண்டு ஹிட்லர் ஆத்திரம் கொண்டு விஷவாயுவை உபயோகிக்க உத்திரவிடக் கூடும். அது அவருக்கே விரோதமாக முடிந்து, யுத்த முடிவையும் துரிதப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

பூர்வாங்க சந்தையல்லாதவற்றின் பெயர்.		1 மனு சோளத்தின் உயரிய விலை. ரூ. அ. பை.	1 மனு கம்புவின் உயரிய விலை. ரூ. அ. பை.
தேவக்கோட்டை டிவிஷன்			
தேவக்கோட்டை	..	7 7 6	7 15 6
திருப்பத்தூர்	..	7 7 6	7 15 6
சிங்கம்புணரி	..	7 9 6	8 1 6
பள்ளத்தூர்	..	7 6 9	7 14 9
காளையார்கோவில்	..	7 7 6	7 15 6
திருப்பூவனம்	..	7 8 6	8 0 6
மானாமதுரை	..	7 7 6	7 15 6
சிவகாசி டிவிஷன்			
பாளையம்பட்டி	..	7 5 6	7 13 6
பாலவநத்தம்	..	7 7 0	7 15 0
காரியாபட்டி	..	7 9 0	8 1 0
திருச்சுழி	..	7 7 0	7 15 0
வத்திராயிருப்பு (ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா)	..	7 7 6	7 15 6
சேத்தூர் ..	..	7 6 0	7 14 0

மதுரை, 1943-ம் ஞு ஜூன்மீ 14உ.

விளம்பரம்.

இந்த ஜில்லாவிலுள்ள மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத விறகைப் போதுமான அளவுக்கு சப்ளை செய்யும் பொருட்டு திரட்டி வைக்கவேண்டியது அவசியமாகி விட்டது. ஆகவே, மதுரையிலுள்ள இராமநாதபுரம் ஜில்லா கலெக்டராகிய கான் பகதூர் மகமத் அலிமதுல்லா கான் சாஹிப், பி.ஏ. வாகிய நான், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 81 (2)-வது விதியின் படி, 1942-ம் ஞு ஜனவரிமீ 21உயிட்ட, 243-ம் நம்பர் (பப்ளிக்) யுத்த இலாக்கா கட்டளைப்படி எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, இந்த ஜில்லாவிற்குட்பட்ட எந்த இடத்திலிருந்தும், இந்த ஜில்லாவிற்கு வெளியே எந்த இடத்திற்கும் ரயில் மூலமாகவோ, ரோடு மூலமாகவோ,- கால்வாய்கள் மூலமாகவோ, கடல் மூலமாகவோ காட்டு விறகையோ, சவுக்கு விறகையோ, கரியையோ எந்த உருவத்திலும் அனுப்பக்கூடா தென்று தடை விதிக்கிறேன். ஆனால், நான் வழங்கும் அனுமதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டு அனுப்பலாம்.

இந்தக் கட்டளை உடனே அமுலுக்கு வரும். இந்தக் கட்டளையை மீறுகிறவர்கள் இந்தியப் பாதுகாப்புச் சட்ட 81 (4)-வது விதிப்படி 3 வருஷக் காவல் தண்டனைக்கோ, அபராதத்திற்கோ, அல்லது இவ்விரண்டிற்குமோ உள்ளாக நேரும்.

எங்கும் எரி நெருப்பு

‘இன்று மலேயாவிற்குள் நுழைந்தார்கள்’ என்ற செய்தி வெளியாகும். பத்து நாட்கள் கூடக் கழிந்திராது. ‘மலேயா முழுவதும் ஜப்பானியர் வசம்’ என்ற செய்தி பறக்கும். இன்று பிலிப்பைன் தீவுகளில் யுத்தம் என்ற தகவல் வரும். நாளை ‘ஆஸ்திரேலியாவிற்கு ஆபத்து’ என்ற செய்தி கிளம்பும். ஜாவா போச்சு, மணிலா போச்சு, நியூகினியா போச்சு, போகன்வில்லா போச்சு, அது போச்சு, இது போச்சு, அங்கு இங்கு, எங்கும் ஜப்பானியர்—இம்மாதிரியாக இருந்தது 1941–1942-ல்.

அது பழங் கதை !

அதெல்லாம் இப்பொழுது பழங்கதையாகி விட்டது. அப்பொழுது தட்டுவாருமில்லை, குள்ளத் தம்பியைக் குட்டுவாருமில்லை. அதனாலே தான் ‘அவரு’ அவ்வளவு வேகமாக, நீரிழிவு வியாதிக்காரனுக்கு வந்த சிலந்திப் புண் மாதிரி, மளமள வென முன்னேறி விட்டார்.

ஆனால், இதெல்லாம் கொஞ்ச நாளைய ஆட்டமாகவே முடிந்தது. ஒரு சினிமாப் படம் இருக்கிறது. அது ரொம்ப நல்ல படமாகவே இருக்கட்டுமே, அப்படியிருந்தால் கூட, சரியான எதிர்ப்பு எதும் இல்லாவிட்டால், அது ஒரு ஊரில் ஒரு வருஷம் ஓடலாம். அப்புறம் அது தானாக நிற்க வேண்டும், அல்லது நிறுத்தப்பட வேண்டியது தானே? அதே போல, ஜப்பானியர் காட்டியதெல்லாம் வெறும் ஆட்டந்தான். நேச தேசத்தாரின் பலமெங்கே, அவர்களின் பலமெங்கே ?

ஆனால், ஒரு சிறு தீவான ஜப்பான், பெரிய தீவுகளில் உள்ள பலாட்டியர்களை வலுச் சண்டைக்கு இழுத்து, இவ்வளவு காலமாகவும், இன்னும் அந்தச் சண்டையை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது பலருக்கு ஆச்சரியமாகவே இருக்கலாம். ஆனால், உண்மை தெரிந்தால், யாரும் ஆச்சரியப்படவே மாட்டார்கள்.

உண்மை என்ன ?

உண்மை என்ன தெரியுமா ? இரண்டரை வருட காலமாக ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறதல்லவா ? இந்தக் காலத்திற்குள்ளே அது ஏராளமான அந்நியப் பிரதேசங்களைப் பிடித்துப் போட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் ஜப்பானுக்கு வெகு தூரத்திலிருப்பவை. எல்லாம் துண்டு துண்டுகளாகச் சிதறிக் கிடக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் ஜப்பானியர் இறங்கி, பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு விட்டார்கள். ஒவ்வொரு இடத்திலும் கொஞ்சம் கொஞ்சம் தான் படை பலம் இருக்கிறது. ஆனாலும், அவற்றில் பல தீவுப் பிரதேசங்களாதலால், நேச தேசத்தினரில், முக்கியமாக அமெரிக்க வீரர்கள் கடல் மூலமாகத் தான் அங்கெல்லாம் சென்றிறங்கிப் போராட வேண்டியிருக்கின்றது. அதற்கு, வழியில் ஏற்படும் எதிர்ப்புகளையெல்லாம் சிறிது சிறிதாகச் சமாளித்துத் தானே ஆக வேண்டும் ?

தற்சமயம் ஏராளமான கப்பல்களும், ஆட்களும், ஆயுதங்களும் ஹிட்லரின் மண்டையை உடைக்கும் உன்னத கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்றன. ஆகவே, ஜப்பானியரை பஸிபிக் பிரதேசங்களில் வேட்டையாடும் வேலை தற்சமயம் பெரிய அளவில் செய்யப்படுவதற்கில்லை. ஆனாலும், யாரும் சும்மா இல்லை. அமெரிக்கர்கள் ஜப்பானியரை பஸிபிக் பிரதேசங்களில் அழவைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷாரும், இந்தியரும், அமெரிக்கரும், ஆபிரிக்கப் படைகளும், சீனர்களும், பர்மாவிலும், சீனாவிலும் ஜப்பானியரைத் திணற அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சீனாவில் இறங்கினால் ?

சீனாவிற்குப் போக சௌகரியமான வழி ஏற்பட்டுவிட்டால், அப்புறம் ஜப்பான் ‘அரோஹரா’ ஆகும். அதற்கு வசதி இல்லாமல், பர்மா ரோடு ஜப்பானியர் வசம் சிக்கிக் கிடக்கிறது. இன்னும் யுத்தம் ஜப்பானியக் கடலை நெருங்கவில்லை. கடல் மார்க்கமாக, அமெரிக்கப் படைகளும், உதவிப் பொருள்களும் சீனாவில் போயிறங்குமானால், அன்றிலிருந்து சில மாதங்கள் கணக்குப் போட்டால் போதும். அவ்வளவு தூரம் போவானேன் ? சீனாவில் அமெரிக்கத் துருப்புகள் என்ற தகவல் பரவினதுமே ஜப்பான் ‘சலாம்’ போட்டுக் கொண்டோ, பண்டியிட்டோ சமாதானத்திற்கு வர முயன்று விடுமே ! ஆனால் அதெல்லாம் யார் கேட்கப் போகிறார்கள், ‘நிபந்தனை யற்ற சரணாகதியே எங்கள் பல்லவி’ என்று தான் பாடுவார்கள் நம்மவர்கள்.

தடுக்க முடியவில்லை

பர்மா பாதையைக் கைப்பற்றவே, வட பர்மாவில் ஸ்டில்வெல் துரை அரும் பாடுபட்டு வருகிறார். அவரது முயற்சிகள் வீண் போகவே இல்லை. போன வாரம் கூட, ஜப்பானியருக்கு உயிர்போலிருந்த மோகாங் நகரம் பிடிபட்டதே ! கவனித்தீர்களா ? அங்குள்ள நேசப் படைகளின் முன்னேற்றத்தை ஜப்பானியரால் தடுக்கவே முடியவில்லை.

பர்மாவின் இயற்கையமைப்பு எப்படியிருக்கிறது ? வடக்கேயிருந்து தான் ஐராவதி நதி கிளம்பி, தெற்கு நோக்கிப் பாய்கிறது. அந்த இயற்கை முறையைப் பின் பற்றியே, ஸ்டில்வெல் துரையின் படைகளும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பாய்கிறார்கள். ஐராவதியை யாராவது தடுத்து நிறுத்த முயலுவார்களா ? நிறுத்தத் தான் முடியுமா ? அதே போல, நேசப் படைகளின் படையெடுப்பை ஜப்பானியர் நிறுத்துவது என்பதும் அசாத்தியம் தான், அனால், அவர்களுக்கிருக்கும் ஆத்திரத்தில், அவர்கள் கண் மூடித் தனமான காரியங்களைச் செய்தால், அதன் பலனை அனுபவிக்க வேண்டியவர்கள் அவர்கள் தான். இப்பொழுது கூட அதை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களே !

ஆசை பாழான கதை

இந்த வட பர்மிய நேசப் படைகளைத் தவிக்க விட வேண்டுமென்பது ஜப்பானியரது அவா. அந்த நோக்கம் ஒன்று தவிர, அசல் ஜப்பானில் உள்ள மக்களுக்கு உத்சாகத்தைத் தரத் தக்க செய்தி எதையும் கொடுத்து வெகு காலமாகி விட்டது. ஆகவே, அவர்கள் இந்தியாவிற்குள் புகுந்தார்கள். ஏதோ ஆஸ்ஸாம் மாகாணத்தையே கௌவி முழுங்கி விடப் போகிறவர்கள் போலவும், சிட்டகாங் வழியே வந்து கல்கத்தாவை கபளீகரம் செய்து விடப் போகிறவர்கள் போலவும் அட்டகாசம் செய்தார்கள். இம்பாலை முற்றுகை போட்டார்கள். கொஹிமாவைப் பிடித்தார்கள். இம்பால் திமாபூர் ரஸ்தாவைக் கைப்பற்றினார்கள். இம்பால் சமவெளிக்குள் புகுந்தார்கள். விஷ்ணுபுரியருகே தடபுடல் செய்தார்கள். ஆனால், இரண்டரை மாத கலாட்டாவிற்கப்பால் அவர்கள் கண்ட பலன் என்ன ?

கொஹிமாவைக் கைவிட்டார்கள். இம்பால் முற்றுகை நீங்கிற்று இம்பால்-திமாபூர் ரஸ்தா ‘சுத்த’மாகி விட்டது. அதிலே, அதி ஜாக்கிரதையுடன் தான், நேச தேச லாரிகள் பாதுகாப்புடன் தாராளமாக கொஹிமாவிற்கும், இம்பாலுக்கும் இடையில் ஓடிக் கொண்டிருக்கின்றன. இம்பால் ரஸ்தாவிற்கு கிழக்கிலும் மேற்கிலும் உள்ள ஜப்பானியப் படைகள் கத்தரிக்காய்கள் போலச் சீவித் தள்ளப்படுகின்றன. இன்னும் இம்பால் அருகே ஜப்பானியர் சல சலத்துக் கொண்டிருக்கிறார்களாம். அவர்களும் நல்ல உதை படுவார்கள் என்பது திண்ணம்.

இதெல்லாம், என்ன கால நிலைமையில் நடக்கின்றது தெரியுமோ ? உலகத்திலேயே மிகக் கடுமையானது என்று பெயர் பெற்ற பருவ மழைகளுக் கிடையிலே. மழையினால் நடவடிக்கை நின்றது என்ற பேச்சே கிடையாது. இம்பால் முற்றுகையின் போது கூட என்ன, அந்த நகருக்கும் வெளி உலகிற்கும் விமான மூலம் தொடர்பு இருந்து கொண்டே தானிருந்தது.

முன்பே தெரியுமே !

இம்மாதிரி யெல்லாம் நடக்கும் என்பது மவுண்ட்பேட்டன் பிரபுவிற்கு நன்றாகத் தெரியும். அதனால் தான், அஸ்ஸாமில் கடுமையான போர் நடந்து கொண்டிருந்த போது கூட, அவர் தமது காரியாலயத்தை கண்டியில் கொண்டு வைத்துக் கொண்டார். அதைப் பலர் கண்டித்தார்கள். ஆனால், அதனால் அஸ்ஸாம் எல்லையில் ஜப்பானியர் உதைக்கப்படுவதில் சிரத்தைக் குறையவில்லையே ?

அவமானம் ! அவமானம் !

இம்பால்-திமாபூர் ரஸ்தாவை இழந்தது, பர்மா பாதையை நேசப் படைகள் நெருங்கிக் கொண்டிருப்பது, நூதன அமெரிக்கப் பறக்கும் கோட்டைகள் யவாடா என்ற ஜப்பானிய நகரில் உள்ள இரும்பு உற்பத்தித் தொழிற்சாலையை

(12-ம் பக்கம் பார்க்க)

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஜூன் 22.—தெற்கு இங்கிலாந்தில் அதிகமான, பறக்கும் வெடிகுண்டுகள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இவை கிளம்பும் பல தளங்களை அமெரிக்கப் படையினர் கைப்பற்றினர்.

அமெரிக்க 8-வது விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் பிரிட்டனிலிருந்து கிளம்பி, ஜெர்மனி மீது வெடிகுண்டுகளை வீசிவிட்டு, ரஷ்யப் பகுதியைப் போயடைந்தன.

ஜூன் 23.—விமானி யில்லா விமானங்களால் நேர்ந்த சேதத்தைக் குறித்து காமன்ஸ் சபையில் பேசிய உள் நாட்டுப் பாதுகாப்பு மந்திரி மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன், யுத்த முயற்சி இதனால் பாதிக்கப்படவில்லை யென்றும், நாட்டின் முக்கியத்துவத்திற்கு ஒரு சிறிதும் தீங்கு நேரவில்லை யென்றும் குறிப்பிட்டார்.

ஜூன் 24.—3 ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை நேசப் படைகள் மூழ்கடித்தன.

ஜூன் 25.—விமானி யில்லா விமான தளங்களை 1,000 நேச விமானங்கள், தாக்கின.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூன் 21.—நிப், மாரம், ஷியான்ட் லோ, டியாங்சப் என்னுமிடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூன் 22.—மோகாங்கை சீனப் படைகள் வளைந்து கொண்டன.

ஜூன் 23.—கொஹிமா இம்பால் பாதை முழுதும் நேசப் படைகள் வசமானது.

சென்ற புதன்கிழமை காலையில் அந்தமான் தீவைச் சேர்ந்த போர்ட் பிளேர் என்னும் துறைமுகத்தை நேச நாட்டு விமானங்கள் தாக்கின.

ஜூன் 24.—சாங்சிங், சிண்டிட்கள் வசமானது. மோகாங்கை அடுத்து கடும் போர் நடை பெறுகிறது.

ஜூன் 25.—நேசப் படைகள் மோகாங்குக்குள் நுழைந்தன.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஜூன் 21.—மெட்வொழிகோர்ஸ்க், ஓஸ்னிசெனே முதலிய 100 இடங்களை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

ஜூன் 22.—சென்ற 3 வருஷங்களில் நடைபெற்ற ரஷ்ய-ஜெர்மன் யுத்தத்தில் ஜெர்மானியர்களுக்கு ஆபீஸர்களுள்பட 78 லட்சம் பேர்களும், 70,000, டாங்கிகளும், 60,000 விமானங்களும் 90,000 பீரங்கிகளுக்கு மேலும் நஷ்டம்.

ஜூன் 24.—விடெப்ஸ் போர் கடுமையாக நடை பெறுகிறது. போடேநோயிக்கு வடக்கே 12 முதல் 18 மைல்கள் தூரம் ரஷ்யப் படைகள் முன்னேறி 200 இடங்களைக் கைப்பற்றின.

ஜூன் 25.—விடெப்ஸ்க் துண்டிக்கப்பட்டுவிட்டது. சாஸியை சோவியத் படைகள் கைப்பற்றின. போப்ருயிஸ்க் பக்கமுள்ள ஜெர்மன் அரண்கள் தகர்ந்தன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஜூன் 21.—பைபா, சின்டெல்லா டார்னே என்னும் இரண்டு இடங்களையும் இந்தியப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜூன் 22.—காமரினோ, அம்ப்ரா இவ்விரண்டும் நேசப் படைகள் வசமாயின.

ஜூன் 23.—இந்தியப் படைகள் இத்தாலியில் மிகச் சிறந்த முறையில் வேலை செய்தன வென்று அமெரிக்கத் தலைவர் பாராட்டினர்.

ஜூன் 24.—மாண்டி கியோகா, கார்சியானே ஆகியவை 8-ம் படை வசமாயின.

ஜூன் 25.—பலோனிகா, மாண்டி ரோடுன்டோ, மேலியோ, சர்டியானே, பெஸ்ஸியா காசில்விடோ, பெட்ரோலா, டார்னியெல்லோ என்னுமிடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூன் 21.—சேர்பூர்க்கை நேசப்படைகள் வளைந்து கொண்டன. ஆஞ்சி, வஸ்டிவில்லி, வலோக்னெஸ், லாபியே, கூவில்லா ரா வில்லா லாபிகட் ஆகியவை நேசப் படைகள் வசமாயின.

அபிவில்லிக்கும் கலேய்க்கும் இடையிலுள்ள விமானியில்லா விமான தளங்களை நேசப் படைகள் தாக்கின.

ஜூன் 22.—செர்பூர்க் மீட்சிப் போர் ஆரம்பமானது.

யுகோஸ்லாவிய மன்னர் பீட்டரும், முதல் மந்திரி டார்டர் சுடேசியும் இத்தாலியிலுள்ள நேசப் படைத் தலைவர்களான ஜெனரல் அலெக்சாந்தரையும் சர் மெய்ட்லன்ட் வில்சனையும் கண்டு பேசினார்கள்.

ஜூன் 24.—செண்ட் ஹோர்னலியை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றின.

ஜூன் 25.—செர்பூர்க்கை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜெர்மன் படைத் தலைவர்களான சாலியும் ஸ்டாக்மனும் கொல்லப்பட்டனர்.

நடு நிலைமை நாடுகள்.

ஜூன் 21.—மாற்றுருப் பெற்ற ஜெர்மன் கப்பல்களை இனி டார்டெனெல்ஸ் வழியாக அனுமதிப்பதில்லை யென்று துருக்கி அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜூன் 21.—மாரியானா தீவுக் கூட்டங்களுக் கிடையில் ஒரு பெரும் கப்பற் போர் நடைபெற்றது. சென்ற சில நாட்களில் 600 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன. பியாக் தீவைச் சேர்ந்த பொரொக்கோ, சாரிடோ என்னும் விமான தளங்கள் அமெரிக்கப் படைகள் வசமாயின.

ஜூன் 22.—மாரியானா தீவுகளுக்கும் பிலிப்பைன் தீவுகளுக்கும் இடையே நடந்த கப்பற் போரில் ஜப்பானியக் கப்பற் படையின் பெரும் பகுதி நொறுங்கி விட்டது. போர் முனையினின்று ஜப்பானியப் போர்க் கப்பல்கள் தப்பியோடின.

ஜூன் 23.—பசிபிக் மகா சமுத்திரத்தில் இன்னும் 16 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தான் மார்ஷல் ஷியாங் கெய் ஷேக்கோடு பேசியதைக் குறித்து அமெரிக்க உபதலைவர் மிஸ்டர் வாலஸ் ஒரு அறிக்கை விடுத்தார்.

ஜூன் 24.—மார்ஷல் ஷியாங் கெய் ஷேக்கும் மிஸ்டர் வாலசும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

த்வம்சம் செய்தது, அப்பால் பஸிபிக் மகா சமுத்திரப் பிரதேசத்திலே, மரியானா தீவுகளுக்கருகே, பெரியதொரு ஜப்பானிய கடற்படை வந்தது வருகிறதென ஐந்நூறு விமானங்களைக் குடையாகக் கொண்டு, அமெரிக்கக் கடற்படையுடன் போராடத் துணிந்து வந்து, நாற்பத்து நான்கு கப்பல்களை இழந்து விட்டு, 47 கப்பல்கள் பழுதடையப் பெற்று, இரவு நேரத்திலே பிடுங்கிக் கொண்டு ஓடியது, சைபான் என்ற இடத்திலே அமெரிக்கப் படைகள் இறங்கி முன்னேறிக் கொண்டிருப்பது, பஸிபிக் பிரதேசத்திலிருந்து ஜப்பானை நெருக்குவது காரணமாக, இந்தியாவிற்கு உள்ள ஆபத்துக் குறைவது, இந்தியா அருகே உள்ள நேச தேசக் கப்பற் படைகளைச் சேர்ந்த விமானங்கள் அந்தமான் தீவில் உள்ள முக்கியத் துறைமுகமான போர்ட் பிளேரைத் தாக்கி பல இடங்களை நாசம் செய்திருப்பது—இத்தனையும் ஜப்பானியர்களுக்கு அவமானம் தரத்தக்கது மட்டுமன்றி, பெரிய தோல்விகளாகும். இந்த தோல்வி என்ற சரக்கு ஒன்றைத் தவிர வேறு எதையும் நேச தேசத்தார் இந்த யுத்தத்தில் ஜப்பானியருக்குக் கொடுக்க விரும்பவில்லை. இந்தச் சரக்கைக் கொடுக்கும் விஷயத்தில் என்ன கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் அவர்கள் லக்ஷ்யம் செய்யப் போவதில்லை. இது காரணமாக, ஜப்பானியர் எங்கு திரும்பினாலும் எரி நெருப்பு என்ற நிலைமையே ஏற்படப் போகிறது. இந்த நிலைமையை அவர்கள் எவ்வளவு காலம் தான் சமாளிக்கப் போகிறார்கள் என்று பார்க்கவேணும்!

வானொலி நாட் குறிப்புகள்.

சென்னை ஜூலை 4	மாலை 7-மணிக்கு—		"லாட்டரி பத்திரங்கள்."
ஷ	ஷ 5	ஷ	"அச்சுப் பிரச்சார முரண்கள்"—ராவ் சாஹிப் டி. எஸ். நடராஜ பிள்ளை.
ஷ	ஷ 7	ஷ	"ஒத்துழைப்பு வேண்டும்—உணவு உற்பத்தி"—மிஸ்டர் எல். என் கோவிந்தராஜன்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.